Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, OCTOBER 18, 2021

திங்கட்கிழமை ஒக்டோபர் 18, 2021 | ஒளி: 07 கதிர்: 129 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE





நூற்றுக்கணக்கான மீனவர்களும் மக்கள் பிரதிநிதிகளும்

# வட கடலில் பேரணி



■ எம். றொசாந்த், சண்முகம் தவசீலன், விஜயரத்தினம் சரவணன், எஸ். நீல்லைநாதன்

இழுவைப் படகுகளையும் தடைசெய்யப்பட்ட வலைகளையும் தடைசெய்யும் 2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க சட்டமூலத்தை முறையாக நடைமுறைப் படுத்துமாறு கோரி, முல்லைத்தீவு - கள்ளப்பாட்டில் இருந்து பருத்தித்துறை துறைமுகம் வரையில் படகுப் பேரணியொன்று, நேற்று (17) முன்னெடுக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், இரா.சாணக்கியன் ஆகியோர் தலைமையில் கள்ளப்பாட்டில் இருந்து ஆரம்பமான இந்தப் படகுப் பேரணியில், வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, வடமாகண சபையின் முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், சந்திரலிங்கம் சுகிர்தன், கேசவன் சயந்தன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் உள்ளூராட்சி மன்ற தலைவர்களும் அதன் உறுப்பினர்களும் மீனவர்களும் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சி P2

## தீண்டிய நாகத்தை பிடித்த சிறுவன்

■ எம்.றொசாந்த்



தன்னை தீண்டிய நாகபாம்புடன், 15 வயது சிறுவன் வைத்தியசாலைக்கு சென்ற சம்பவமொன்று, யாழ்ப்பாணம் - சாவகச்சேரி, நுணாவில் பகுதியில், நேற்று (17) இடம்பெற்றுள்ளது. அச்சிறுவன், அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனது நண்பர்களுடன் வயலுக்கு சென்றிருந்த போது, பாம்பு தீண்டியுள்ளது. இதையடுத்து, குறித்த சிறுவனும் அவனுடைய நண்பர்களும் இணைந்து அப்பாம்பை பிடித்து, போத்தலில் அடைத்துக் கொண்டு, சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர். இதன்போதே, சிறுவனை கடித்தது நாகபாம்பு என தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

## நிருபமா ராஜபக்ஷவின் சொத்துவிபரங்களை வெளியிடவும்

### ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் கோரிக்கை!

'பென்டோரா பேப்பர்ஸ்' சர்ச்சையில் சிக்கியுள்ள முன்னாள் பிரதியமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் சொத்து விபரங்களை வெளிப்படுத்துமாறு ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு தகவல் அறியும் உரிமை விண்ணப்பப்படிவங்களைத் தாக்கல் செய்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு, பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதி அலுவலகம் ஆகியவற்றுக்கே மூன்று விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளது.

TRANSPARENCY INTERNATIONAL

தொடர்ச்சி P2

மாகாண சகைத் தேர்தலில்

## தனி வழியிலா? கூட்டணியிலா? எதிர்வரும் வாரங்களில் முடிவு

மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதா? அல்லது கூட்டணியில் போட்டியிடுவதா? என்பதை எதிர்வரும் காலங்களில் அறிவிப்போம் என தெரிவித்துள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு அமைய தீர்மானம் எடுக்கப்படும் என்றார்.

தொடர்ச்சி P2

## புத்திசாலிகள் கூடி குறைந்தால் தெற்கு ஆசிரியர்களே பொறுப்பு



■ அஜித்லால் சாந்தஉதய

தெற்கில் ஆசிரியர்கள் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கும் போது, வடக்கிலுள்ள ஆசிரியர்கள் அங்குள்ள மாணவர்களுக்கு கற்பிக்கின்றமையால் எதிர்காலத்தில் வடக்கில் புத்திசாலிகள் அதிகரிக்கும் அதேவேளை, தெற்கில் புத்திசாலிகளுக்கு ஏற்படும் பற்றாக்குறைக்கு ஆசிரியர்களே பொறுப்பு கூற வேண்டும் என, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 4 சிறுவர்கள் மரணம்

கொரோனா தொற்று ஏற்பட்டு 2 முதல் 6 வாரங்களுக்குள் ஏற்படும் நோய் காரணமாக இலங்கையில் நான்கு சிறுவர்கள் இதுவரையிலும் மரணித்துள்ளனர் என்று சுகாதார தகவல்கள் தெரிவிக்கின்றன.


சிறுவர்களில் உள்ள பல அமைப்பு அழற்சி நோய்க்குறி (MIS-C) ஆரம்பத்தில் ஐக்கிய இராச்சியத்தில் கண்டறியப்பட்டது. இந்த நோய்க்குறி இந்த வருட ஆரம்பத்தில் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## கொரோனாவுக்குப் பின் சிறுவர்களுக்கு 'மிஸ்'-சி

### வைத்தியர் .விஜி திருக்குமார் எச்சரிக்கை

■ வி.ரி.சகாதேவராஜா



கொரோனா தொற்று அறிகுறிகளுடன் அல்லது அறிகுறிகள் இல்லாமல் வந்து போகலாம். அதன் பின் சில நாள்கள், கிழமைகளில் MIS-C யானது 21 வயதுக்குட்பட்டவர்களின் உடலில் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கான உறுதியான காரணிகள் இன்னும் கண்டறியப்படவில்லை

ஆகையால், பெற்றோர்கள் கவனமாக இருக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல்

## 'எனது அரசியல் வாழ்வின் சோக நிகழ்வு'



2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல் தனது அரசியல் வாழ்க்கையில் மிகவும் சோகமான நிகழ்வாக உள்ளது என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## கோழிமுட்டை, பசும்பால் விலைகளும் உயரும் அபாயம்

எரிவாயு, பால்மா, கோதுமை மா, சீமெந்து, சீனி, பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு என பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அண்மையில் அதிகரிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், பசும்பால் மற்றும் கோழி முட்டை விலைகளும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாகத் தெரியவருகிறது. முன் மொழியப்பட்ட எரிபொருள் விலை உயர்வால், போக்குவரத்துத் தொடர்பிலான செலவுகளைக் கருத்தில்கொண்டு, அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வுடன் மக்கள் ஏற்கெனவே போராடி வருகின்றனர்.

தொடர்ச்சி P2



## வடக்கு, கிழக்கில் இன்று விவசாயிகள் போராட்டம்

■ க. அகரன்

நாட்டில், உரம் மற்றும் கிருமிநாசினி பற்றாக்குறை விவசாயிகளையும் தோட்டத்தொழிலையும் மிக மோசமாகப் பாதித்திருப்பதாக தெரிவித்து, அனைத்து சுமநல சேவைகள் நிலையத்துக்கு முன்பாக, விவசாயிகள், இன்று (18), போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

தொடர்ச்சி P2

## கடல் பேரணிக்கு குருநகர் மீனவர்கள் எதிர்ப்பு



முழுச் செய்தி P4

## தீர்வின்றேல் அமைச்சருக்கு எதிராக பிரேரணை

### திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி அறிவிப்பு



உரப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வை வழங்காவிடின், விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வரப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று (17) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஊடகவியலாளர்கள் கலரிகள் முற்றாக திறந்தன

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களால் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து ஊடகவியலாளர்களையும் பாராளுமன்ற செய்தி சேகரிப்புக்கு அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார். கொரோனா அதிகரித்ததன் காரணமாக, ஒவ்வோர் ஊடக நிறுவனத்திலிருந்தும் ஊடகவியலாளர் ஒருவர் மாத்திரமே பாராளுமன்ற அமர்வுகளின்

தொடர்ச்சி P2

## இந்திய மீனவர்களுக்கும் இந்தியாவுக்கும் எதிரான போராட்டம் அல்ல

### சாணக்கியன் தெரிவிப்பு: டக்ளஸையும் சாடினார்

■ வ.சக்தி



இலங்கை மீன்பிடி அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா, இலங்கை சட்டத்திட்டங்களை முறையாக அமுல்படுத்தாத காரணத்தால், வடக்கு, கிழக்கில் வாழும் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

LK Newspapers

PAGE 1 தொடர்ச்சிகள்

# வட கடலில் பேரணி

மேலும், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, தாளையடி, செம்பியன்பற்று, நாகர்கோவில், குடத்தனை, மணற்காடு, கற்கோவளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொறொழிலாளர்கள், தங்களது படகுகளுடன் இப்பேரணியில் இணைந்துகொண்டனர்.

அத்துடன், இந்தப் பேரணியில் பருத்தித்துறை துறைமுகத்துக்கு அப்பால் உள்ள சுப்பர்மடம், பொலிகண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களும், தமது படகுகளுடன் கற்கோவளம் கடற்பகுதியில் காத்திருந்து, பேரணியுடன் இணைந்துகொண்டனர்.

கள்ளப்பாட்டில் இருந்து காலை 7.15 மணிக்கு புறப்பட்ட இந்தப் படகுப் பேரணி, காலை 9.30 மணியளவில், பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்ததது.

பேரணியாக வந்தோர் 'இழுவைப் படகுகளை தடைசெய்', 'எங்கள் கடல் எங்களுக்கே உரிமை' ஆகிய கோஷங்களை எழுப்பியவாறு பருத்தித்துறை துறைமுகத்தை கரை சேர்ந்தனர்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களின் ரோலர் மீன்பிடி முறையின் காரணமாக, வடமாகாண மீனவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மீனவர்களுக்கு நீதி கோரியே, கடல்வழியாக இந்த கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## புத்திசாலிகள் கூடி குறைந்தால் தெற்கு ஆசிரியர்களே பொறுப்பு

பலாங்கொட பிரதேசத்தில் நேற்று (17) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

சம்பளம் போதாது என ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். உண்மையில் சம்பளம் வேண்டும தான். அதிக சம்பளம் வேண்டுமாயின் பிரத்தியேக வகுப்புகளை நடத்த முடியாது. தற்போதைய சம்பளத்தை விட பல மடங்கு பிரத்தியேக வகுப்புகளில் ஆசிரியர்கள் உழைக்கின்றனர்.

தெற்கில் ஆசிரியர்கள் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டு எதிர்கால பிள்ளைகளுக்கு கற்பிக்காவிட்டாலும் வடக்கிலுள்ள ஆசிரியர்கள் அங்குள்ள மாணவர்களுக்கு கற்பிக்கின்றனர். இந்த நிலை நீடித்தால் வடக்கிலுள்ள மாணவர்கள் கல்வியில் பாரிய வெற்றியைச் சந்திப்பர்.

அங்குள்ள ஆசிரியர்கள் தமது கடமைகளை நிறைவேற்றும் போது, பல வருடங்களில் படித்தவர்கள் வடக்கிலிருந்து ஆகக்கூடுதலானோர் உருவாகுவர். தெற்கில் இந்த நிலை மோசமாகும் என்றார்.

## 4 சிறுவர்கள் மரணம்

சிறுவர்களுக்கு வைரஸ் அறிகுறிகள் தென்பட்டால் பெற்றோர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் உடனடியாக சிகிச்சை பெறுமாறும் வைத்திய நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

19 வயதுக்குட்பட்ட சிறுவர்களை இந்த நோய்க்குறி பாதிக்கும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'எனது அரசியல் வாழ்வின் சோக நிகழ்வு'

பொலன்னறுவையில் நேற்று (17) காலை இடம்பெற்ற நிகழ்சியின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்விடயத்தை அவர் தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் என்பது சிக்கலான விடயம், அது பற்றி விரிவாக விவாதிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த அவர், மாவட்ட நீதிமன்றங்கள் உட்பட ஈஸ்டர் குண்டுவெடிப்பு தொடர்பான சுமார் 20 வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றன என்றும் குறிப்பிட்டார்.

அனைவருக்கும் நீதி வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் இருப்பதாகத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, கத்தோலிக்க சமூகத்தின் மீது, தான், மிகுந்த மரியாதையும் அன்பும் வைத்திருப்பதாகவும் அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

உர விவகாரம் குறித்து கருத்துத் தெரிவித்த அவர், அரசாங்கம் இரசாயன உர இறக்குமதியை நிறுத்த தீர்மானித்த போது, அதன் எதிர்கால விளைவுகள் குறித்து ஜனாதிபதி உட்பட அரசாங்கத்துக்கு பல சந்தர்ப்பங்களில் எடுத்துரைக்கப்பட்டது எனத் தெரிவித்த அவர், விவசாயிகள் இப்போது ஆதரவற்றவர்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

## தீர்வின்றேல் அமைச்சருக்கு எதிராக பிரேரணை

தொடர்ந்து தெரிவித்த அவர்

இலங்கையில் இன்று பாரிய பிரச்சினையாக மாறியுள்ள உரப் பிரச்சினையை இந்த அரசாங்கம் மிகவும் குழப்பகரமாக மாற்றியுள்ளது என தெரிவித்த அவர், விவசாயிகளின் உரப் பிரச்சினை நெல் உற்பத்திக்கு மாத்திரமின்றி தேயிலை, பழவகைகள் மரக்கறி உள்ளிட்ட அனைத்து உற்பத்திகளுக்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

விவசாயிகள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது உரத்தைக் கோரியே அன்றி, அரசாங்கத்துக்கு எதிராக அல்ல. அதனை அரசாங்கத்துக்கு எதிரான போராட்டமாக மாற்ற அரசாங்கமே வழி ஏற்படுத்திக்கொடுத்துள்ளது என்றார்.

உரப் பிரச்சினையை தீர்க்க அரசாங்கம் எடுத்துக்கொண்ட காலம் அதிகம் என



தெரிவித்த அவர், இதன்மூலம் அரசாங்கத்தின் தோல்வி காட்சிப்படுத்தப்படுகின்றது என்றார்.

எனவே, இன்னும் விவசாயிகளின் உரப் பிரச்சனையை தீர்க்க, விவசாயத்துறை அமைச்சர் காலம் தாமதித்தாரானால் அவரது செயற்பாடுகளை அடிப்படையாக கொண்டு, அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வர நேரிடும். நாங்கள் அப்படி செய்யாவிடின் அது மக்களுக்கு செய்யும் அநீதியாகும் என்றார்.

நாட்டு மக்களுக்கு இருக்கும் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில், அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காகவே இவ்வாறு தீர்மானித்தோம் என்று தெரிவித்த அவர், அரசாங்கமும் அமைச்சரும் பொறுப்பின்றி செயற்படுவதை நாட்டு மக்களுக்கு உணர்த்தவே நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவதாகவும். இது எதிர்க்கட்சியின் பொறுப்பாகும் என்றார்.

## நிருபமா ராஜபக்ஷவின் சொத்துவிபரங்களை வெளியிடவும்

1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடன சட்டத்திற்கு அமைவாக, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட பதவி வகிக்கும் அரச அதிகாரிகள் தமது வாழ்க்கைத் துணை மற்றும் அவரைச் சார்ந்துள்ள பிள்ளைகளின் சொத்துக்கள், பொறுப்புக்கள் உள்ளடங்கலான சொத்து மற்றும் பொறுப்புக்களின் வருடாந்த பிரகடனங்களை சமர்ப்பிக்க வேண்டும் என ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும், இவ்விடயத்தில் பணத்தூய்தாக்கல் இடம்பெற்றிருக்கக்கூடுமா என்பது குறித்து உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் நிதிக் குற்ற விசாரணைப்பிரிவுக்கும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

## தனி வழியிலா? கூட்டணியிலா? எதிர்வரும் வாரங்களில் முடிவு

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்று முந்தினம் (16) இடம்பெற்ற கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம். மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது மற்றும் வெற்றிப்பெறும் திட்டங்களை செயற்படுத்துவது குறித்து கட்சியின் உறுப்பினர்களிடம் கலந்துரையாடியுள்ளோம். மாகாண சபைம" தேர்தல் இடம் பெறுவதற்கு முன்னர் சுதந்திரக் கட்சியை பலப்படுத்துவது பிரதானமாக காணப்படுகிறது என்றார்.

மேலும், பொருளாதார ரீதியில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் மத்தியில் ஏழ்மை உருவாகியுள்ளதுடன், இப்பிரச்சினைக்கு குறுகிய காலத்தில் தீர்வு காண முடியாது என்றார்.

எனவே, பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமாயின் நீண்டகாலத்தை திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய திட்டம் வகுக்கப்பட வேண்டும். அரசாங்கம் மாறும் போது அபிவிருத்தி கொள்கைகள் மாற்றமடைந்தால் நாட்டை முன்னேற்ற முடியாது. இதுவரையில் இவ்வாறான தன்மையே காணப்பட்டது என்றார்.

## கொரோனாவுக்குப் பின் சிறுவர்களுக்கு 'மிஸ்'-சி

கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஸ்ட விரிவுரையாளரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை நல வைத்திய நிபுணருமான வைத்தியகலாநிதி வைத்தியர் .விஜி திருக்குமார், இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இப்புதுவகை 'மிஸ்' - சி என்ற ஆபத்தான நோயை MIS - C - Multisystem Inflammatory Syndrome என்று அழைப்பர்.

'மிஸ்' - சி MIS-C என்பது சிறுவர்களில் பெரும்பாலான அங்கங்களில் பாதிப்பை ஏற்படுத்துதலாகும்.பொதுவாக இதயம் , நுரையீரல்,மூளை,சிறுநீரகம்,கண்,தோல்,உணவு சமிபாட்டுத் தொகுதி போன்ற பல தொகுதிகளை ஒன்றிணைந்ததாக இப் பாதிப்பு காணப்படுகிறது.

இந் நோயின் அறிகுறிகளாக காய்சலுடன் வயிற்று வலி, வயிற்றுப்போக்கு,வாந்திமயக்கம், தலைச்சுத்து ,குருதி அமுக்கம் குறைதல்,கண்ணினுள் இரத்த கசிவு காணப்படல்,தோலில் வேறுபட்ட தழும்புகள் (RASH) காணப்படலாம்.

இருப்பினும் எல்லா பிள்ளைகளிலும் எல்லா அறிகுறிகளும் தென்படாது.

இவற்றின் தாக்கம் தீவிரமாக உள்ள சிறுவர்களில் மூச்சு விடுதலில் சிரமபடுவார்கள். கடுமையான நெஞ்சு வலி/ நோ நீண்ட நேரம் காணப்படும். தடுமாற்றம்.இயல்பாக இருக்க முடியாது உதடு? விரல்களின் நிறம் நீலமாக மாறுதல்.போன்ற நிலமைகளை அவதானிக்க கூடியதாக இருக்கும் என்றார்.

இவர்கள் உடனடியாக அரச வைத்தியசாலைகளுக்கு சென்று விசேட வைத்திய நிபுணர்களை அணுகின்ற போது தேவையான குருதி பரிசோதனைகள்,மார்பு X-கதிர்,வயிறு ,இதயம் ஸ்கேன் போன்றவை முன்னெடுக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படும்.

## வடக்கு, கிழக்கில் இன்று விவசாயிகள் போராட்டம்

வடக்கிலும் கிழக்கிலும் பெரும்போக நெற் பயிர்ச்செய்கை தற்போது ஆரம்பமாகியுள்ள நிலையில், ஒரிரு வாரங்களுக்குள் பசளை மற்றும் கிருமி நாசினி அத்தியாவசியமாக தேவைப்படும் என விவசாயிகள் தெரிவித்துள்ள நிலையிலேயே, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பல இடங்களில் ஒரே நேரத்தில் நடைபெறவிருக்கும் இந்தப் போராட்டங்களுக்கு, அனைவரும் ஆதரவளிக்க வேண்டுமென, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும் பாரளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், வவுனியா மாவட்டத்திலும், இன்று காலை 9 மணிக்கு, வவுனியா மாவட்ட அனைத்து கமநல சேவை நிலையம் முன்பாக, விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக, வவுனியா மாவட்ட தமிழரசு கட்சியின் அமைப்பாளர் நடராசா கருணாநிதி தெரிவித்துள்ளார்.

## கோழிமுட்டை, பசும்பால் விலைகளும் உயரும் அபாயம்

இருப்பினும், கோழி முட்டையின் விலையையும் அதிகரிப்பது தவிர்க்க முடியாதது என்று, அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

முன்பு 15 ரூபாய் முதல் 17 ரூபாய் வரை விற்பனையாகி வந்த முட்டையின் விலை, தற்போது 20 ரூபாய் முதல் 22 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருவதாக, அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன, பசும் பாலுக்கான விலை உயர்வைக் கோரியுள்ளார்.

மாடு வளர்ப்போரிடமிருந்து பசும் பால் ஒரு லீட்டருக்கு 50 - 60 ரூபாய்க்கு இடைப்பட்ட விலையில் கொள்வனவு செய்யப்படுகின்றது. ஆனால், அதன் விற்பனை விலை 400 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்திய மீனவர்களுக்கும்...

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்படி நடவடிக்கைகளைக் கண்டித்து, முல்லைத்தீவு- பருத்தித்துறை வரை நேற்று (17) இடம்பெற்ற போராட்டத்தின்போதே, அவர் இந்தக் கருத்தை முன்வைக்கு காணொளியொன்றை வெளியிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், "இந்தப் போராட்டமானது இந்தியா மற்றும் தமிழ்நாடு அரசாங்கங்களுக்கு எதிரான போராட்டமோ அல்லது இந்திய மீனவர்களுக்கு எதிரான போராட்டமோ அல்ல.

"தமிழ்நாடு மீனவர்களில் ஒருசிலர் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை, மீன்பிடித்துறை அமைச்சர் பார்த்தும் பாராது செயற்படுவதற்கு எதிராகவே, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

## ஊடகவியலாளர்கள்...

போது, செய்திகளை சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில், இரண்டு தடுப்பூசி டோஸ்களையும் பெற்ற அனைத்து ஊடகவியலாளர்களும் பாராளுமன்ற அமர்வுகளில் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படவுள்ளனர் என்றார். பராளுமன்ற செய்தி சேகரிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பம் மற்றும் வரவு-செலவுத் திட்ட விவாத செய்தி சேகரிப்பில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என்று பாராளுமன்ற அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். கொரோனா பரவுவதைக் குறைப்பதைக் கருத்தில் கொண்டு ஊடகவியலாளர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

LK Newspapers Viber Community

## ஈஸ்டர் தாக்குதல்;

# முடிச்சியை அவிழ்க்கவும்

### சர்வதேசத்திடம் கர்தினால் மெல்கம் கோரிக்கை



உயிர்த்த ஞாயிறுத் தினத்தன்று இடம்பெற்ற அடிப்படைவாதிகளின் பயங்கரவாதத் தாக்குதலை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தியவர்கள் யார் என்பதை அறிந்துக்கொள்ள விரும்புவதாக கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கேட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கையர்களுக்கு தெளிவுப்படுத்துவதற்கு இணையவழியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்விலேயே கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னணியில் 7 அல்லது 8 முஸ்லிம் அடிப்படைவாதிகள் மாத்திரம் இருக்கவில்லை. அந்த தாக்குதலை தங்களது அரசியற் நோக்கங்களுக்காக பயன்படுத்தியவர்கள் யார் என்பதை அறிய தான் விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள அனைத்தையும் ஜனாதிபதி நிறைவேற்றப்போவதாக தேர்தல் மேடைகளில் தெரிவித்துள்ளார்.

எனினும், அந்த ஆணைக்குழுவின் அறிக்கை வெளியான இரு நாள்களுக்குப் பின்னர் தன்னிடம் பேசிய ஜனாதிபதி, அறிக்கையில் உள்ள அனைத்துவிடயங்களை நடைமுறைப்படுத்த முடியாது என கூறியதாகவும், சில விடயங்களை நடைமுறைப்படுத்தினால் தனக்குப் பிரச்சினைகள் ஏற்படும் எனவும் ஜனாதிபதி இதன்போது தன்னிடம் கூறியதாகவும் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்கள் யார்? உண்மையில் என்ன நடந்தது? யார் இதனை செய்தார்கள்? போன்ற விடயங்களை தெரிந்துகொள்ள வேண்டுமாக இருந்தால் சர்வதேசத்தின் உதவி அவசியம் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் சில அடிப்படைவாத முஸ்லிம்களைவிட பெரிய விடயம் ஒன்று உள்ளது. அது என்னவென்று கண்டறியும் வரை திருப்தி அடைய முடியாது எனவும் கூறிய அவர், அதனை வெளிப்படுத்தவில்லை என்றால் மக்கள் ஏமாற்றப்படுவார்கள் எனவும் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

## வெட்டிக்கொண்டதில் 2 கைகளும் துண்டாகின



பண்டாரகம வல்கம சுனாமி வீட்டுத் திட்டப் பகுதியில் இளைஞர்கள் இருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொண்டனர். இதனால், ஒரு இளைஞனின் இரண்டு கைகளும் துண்டாப்பட்டுள்ளன. மற்றைய இளைஞனின் இடது கைக்கு கடும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டு, அண்மையில் விடுதலை செய்யப்பட்ட நபரே இவ்வாறு கொடூரமான முறையில் தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## கட்டுரைப் போட்டி

வடக்கில் இருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, முப்பத்தொரு ஆண்டுகள் நிறைவடைவதையிட்டு, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம், திறந்த கட்டுரைப் போட்டியை தமிழ்மொழியில் மட்டும் நடாத்த தீர்மானித்துள்ளது.

'வட மாகாண முஸ்லிம்களின் இன்றைய அவல நிலையும், அதில் இருந்து தீர்வை நோக்கி' எனும் தலைப்பில் இக்கட்டுரைப்போட்டி நடைபெறவுள்ளது. ஆக்கங்கள் இம்மாதம் (ஒக்டோபர்) 30ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறும், சுமார் 1,000 சொற்களுக்கு மேற்படாமலும், தட்டச்சு செய்து அனுப்பி வைக்க வேண்டும்.

முதல் மூன்று இடங்களுக்கு முறையே, ரூ. 15,000 , ரூ. 10,000 மற்றும் ரூ. 5,000 ரூ வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். உங்கள் கட்டுரைகளை acumlyfadmn@gmail.com, எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம், இல: KG 7, எல்விடிகல மாடி வீடு, கொழும்பு 8 எனும் முகவரிக்கோ அனுப்பிவைக்கலாம்.

## இந்திய இராணுவ தளபதி விமானப்படை தளபதியை சந்தித்தார்




இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள, இந்திய இராணுவ தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவானே, இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரணவை விமானப்படை தலைமையகத்தில் சந்தித்து உரையாடியுள்ளார்.

கொழும்பு விமானப் படைத் தள கட்டளை அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் வாசகே தலைமையில் விமானப்படை வர்ண அணிவகுப்பு படைப்பிரிவின் இராணுவ மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.

இதன்போது இந்திய இராணுவ தளபதி, தனது தந்தை இந்திய விமானப்படை அதிகாரியாக கடமை புரிந்ததாக தெரிவித்தார். இறுதியாக இருவருக்கும் இடையிலான நினைவு சின்னங்கள் பரிமாறப்பட்டன.

## ஜம்இய்யத்துல் உலமா அனுதாபம்

தாய்நாட்டின் கல்வி வளர்ச்சிக்காக இறுதி வரை பங்காற்றிய பேருவளையைச் சேர்ந்த பேராசிரியர் ஏ.ஜி. ஹுஸைன் இஸ்மாயீலின் மரணச் செய்தி எம்மை ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியதாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பொதுச் செயலாளர், அஷ்-ஷைக். அர்கம் நூராமித் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் ஏ.ஜி. ஹுஸைன் இஸ்மாயீல், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் அகில இலங்கை கல்வி மாநாட்டின் தலைவராகவும் அதிகமான காலம் சேவை செய்ததோடு, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக இரண்டு தடவைகள் கடமை புரிந்து இந்நாட்டின் கல்வி மேம்பாட்டுக்கு பாரிய பங்களிப்புக்களைச் செய்துள்ளார்.

மேலும், அன்னார் மலேசியாவில் காணப்படும் மலாயா பல்கலைக்கழகத்திலும் இஸ்லாமிய கலைகளுக்கான பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளராக கடமை புரிந்துள்ளார்கள். அத்துடன் தர்கா நகரில் அமைந்திருக்கும் 'இஷாஅத்துல் இஸ்லாம்' அனாதை இல்லத்தின் பொதுச் செயலாளராகவும் சுமார் 30 வருடங்கள் பணியாற்றியுள்ளார்கள்.

> அத்துடன் தர்கா நகரில் அமைந்திருக்கும் 'இஷாஅத்துல் இஸ்லாம்' அனாதை இல்லத்தின் பொதுச் செயலாளராகவும் சுமார் 30 வருடங்கள் பணியாற்றியுள்ளார்கள்

## ஆசிரியர்களை மிரட்டினால், நிலைமை மோசமாகும்



அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வை வழங்கக்கோரி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும், ஆசிரியர்களுக்கு ஏதாவது ஒன்று நேர்ந்தால் அல்லது மிரட்டினால், போராட்டம் தீவிரப்படுத்தப்படும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க எச்சரித்துள்ளார்.

அழுகிய தக்காளி, முட்டைகள் தாக்குதல் நடத்தினாலோ அல்லது ஆசிரியர்கள் மேல் கையை வைத்தாலோ தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் போராட்டத்தை இலகுவில் ஒருபோதும் கைவிடமாட்டோம் என்றார்.

அதிபர், ஆசிரியர் போராட்டங்களை விமர்சிக்கும் அரசியல்வாதிகளின் பிள்ளைகள் வெளிநாடுகளிலேயே கல்வி கற்று வருகிறார்கள். இப்போராட்டத்துக்கு தீர்வை வழங்க கோரி பெற்றோர்களும் வீதிக்கு இறங்கி போராட வேண்டும் எனவும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க கூறினார்.


# கம்பஹா மாநகர சபை பொருட்கள் விநியோகஸ்தர் மற்றும் சேவை வழங்குனர்கள் பதிவுசெய்தல் – 2022

2022 ஆம் ஆண்டுக்கு கம்பஹா மாநகர சபைக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்கு பொருட்கள் விநியோகஸ்தர் மற்றும் சேவை வழங்குனர்கள் பதிவு செய்தல் 2021.10.21 ஆம் திகதி தொடக்கம் 2021.11.19 ஆம் திகதி வரை வார நாட்களில் நடைபெறும்.

பதிவுசெய்வதற்கு விண்ணப்பபடிவத்தினை கம்பஹா மாநகர சபையின் கணக்கு பிரிவில் அல்லது கம்பஹா மாநகர சபையின் வலைத்தளமான www.gampaha.mc.gov.lk மூலம் விண்ணப்பபடிவத்தினை பெற்றுக்கொள்ளலாம். குறிப்பிடப்பட்ட பதிவுக் கட்டணத்தை சபைக்கு கொடுப்பனவு செய்வதன் மூலம் பதிவு செய்துக்கொள்ளலாம். கட்டணத் தொகையை காசோலை முலமாக கொடுப்பனவு செலுத்துவதாயின் "நகரசபை ஆணையாளர் மாநகர சபை - கம்பஹா" எனும் பெயரிட்டு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் மற்றும் காசோலை அனுப்பும் பொழுது கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "விநியோகஸ்தர் பதிவு செய்தல் 2022" என்று குறிப்பிடப்படல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்துடன் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)

| | 01 விநியோக சேவை | பதிவு கட்டணம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | அலுவலகத்திற்கு தேவையான சகலவிதமான காகிதாதிகள் விநியோகம் | 3000.00 |
| 2 | கணினி சாதனங்கள் மற்றும் கணினி தேவையான சகலவிதமான காகிதாதிகள் விநியோகம் | |
| 3 | அச்சிடப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள், ரசீது புத்தகங்கள், அச்சிடப்பட்ட எழுதுபொருள் போன்ற பொருட்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்க வேண்டும் | |
| 4 | அசல் டோனர், ரிப்பன், கார்ட்ரிட்ஜ் வகைகள் விநியோகம் | 2000.00 |
| 5 | சீருடைக்கான காலணிகள், ஷூ பொலிஷ் டின், மேஸ், பைகள் போன்ற பொருட்கள் விநியோகம் | |
| 6 | சீருடைக்கான துணி வகைகள், டி-ஷர்ட்கள், பைகள், தொப்பிகள், பொத்தான்கள், பதக்கங்களை அணிவிக்கும் தோல் பட்டி போன்று தயாரிப்பதற்கான துணி வகைகள் விநியோகம் | |
| 7 | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள், கையுறைகள் மற்றும் எரிவாயு முகமூடிகள் பொருட்கள் விநியோகம் | 500.00 |
| 8 | சீருடைகள் தயாரித்து விநியோகம் | |
| 9 | வீதி பராமரிப்பு மற்றும் கட்டிட கட்டுமானத்திற்கு தேவையான சகல விதமான பொருட்கள் விநியோகம் | |
| 10 | தார் ் கொலாஸ் ் பிரீமிக்ஸ் ் கொங்கிரீட் / ரெடிமிக்ஸ் போன்றவை விநியோகம் | |
| 11 | கட்டிட கட்டுமானத்திற்கு தேவையான சகல விதமான பொருட்கள் (பெயிண்ட், குழாய்கள் மற்றும் குழாய் பொருத்த தேவையான இதர பொருட்கள்) விநியோகம் | |
| 12 | பாட்டீசியன் வேலைகளுக்கு தேவையான அலுமினிய மற்றும் மற்றைய பொருட்கள் விநியோகம் | |
| 13 | கெல்வனைய்ஸ் மற்றும் இரும்பாலான உட்பத்தி பொருட்கள் விநியோகம் | |
| 14 | கெல்வனைய்ஸ் குழாய்கள், குழாய் பொருத்த தேவையான பொருட்கள், கூரைத் தகடுகள் மற்றும் சகல விதமான இரும்பு பொருட்கள் விநியோகம் | 3000.00 |
| 15 | ஹியூம் குழாய்கள், கான்கிரீட் செய்யப்பட்ட பொருட்கள் விநியோகம் | |
| 16 | வீதி விளக்குகலை ஒளியூட்டுவதற்கு தேவையான உபகரணங்கள் விநியோகம் | |
| 17 | அலுவலக மின் உபகரணங்கள் / மின் விநியோக உபகரணங்கள் விநியோகம | |
| 18 | தும்புதடி, ஈகில் விளக்குமார், பிரம்பு கூடைகள் விநியோகம் | |
| 19 | விவசாய மற்றும் விவசாயத்திற்கு தேவையான கருவிகள் போன்ற பொருட்கள் விநியோகம் | |
| 20 | கிருமி நாசினிகள் (பைநோல், சவர்காரம், விம், ஹார்பிக், லைய்சோல்) போன்ற சுத்தம் செய்யும் சுகாதார திரவங்கள் விநியோகம் | |
| 21 | மோட்டார் வாகனங்கள், லாரிகள், டிராக்டர்கள், பெக்ஹோ இயந்திரங்கள் போன்ற வீதி பராமரிப்பு வாகனங்களுக்கான உதிரி பாகங்கள் விநியோகம் | 3000.00 |
| 22 | முச்சக்கர வண்டிகளுக்கான உதிரி பாகங்கள் விநியோகம் | |
| 23 | பெட்டரி வகைகள், டயர், டியுப், கொலர், ரிம் போன்ற பொருட்கள் விநியோகம | |
| 24 | மசகு எண்ணெய், கிரீஸ், பிரேக் ஆயில் போன்ற பொருட்கள் விநியோகம் | |
| 25 | பாராலைகள், பலகைகள், ரீப்ப போன்ற மரப்பலகைகள் பொருட்கள் விநியோகம | |
| 26 | கால்நடை அறுவை சிகிச்சை உபகரணங்கள் போன்ற மற்றைய உபகரண பொருட்கள் விநியோகம் | 1000.00 |
| 27 | கால்நடை மருந்துகள், நரம்பு ஊசிகள் வகைகள், கையுறைகள் போன்ற பொருட்கள் விநியோகம் | 1500.00 |
| 28 | கணினி சாதனங்கள் மற்றும் பிரிண்டர்கள் விநியோகம் | |
| 29 | நகல் பிரதியெடுக்கும் இயந்திரம், டுப்லோ இயந்திரம் போன்ற சகலவித அலுவலக இயந்திரங்கள் விநியோகம் | |
| 30 | அலுவலக மேசை, நாற்காலிகள் போன்ற சகல விதமான தளபாடங்கள் (பலகை / அலுமீனியம் / பிளாஸ்டிக்) விநியோகம் | |
| 31 | மின்னணு உபகரணங்கள், ஒலிபெருக்கி இயந்திர பொருட்கள் விநியோகம் | |
| 32 | டிரக்குகள், லாரிகள், டிராக்டர்கள், டிரெய்லர்கள் உட்பட கட்டுமானதததிற்கு தேவையான உபகரணங்கள் இயந்திரங்கள் போன்ற பொருட்கள் விநியோகம் | 3000.00 |

| | 02 சேவைகள் | |
|---|---|---|
| 1 | கணினி இயந்திரங்கள், அச்சு இயந்திரங்கள் பழுது பார்த்தல் | |
| 2 | கணினி வலையமைப்பு மற்றும் நெட்வொர்க்குகளின் பராமரிப்பு | 2000.00 |
| 3 | டிராக்டர்கள், பேக்ஹோ இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், லொரிகள், முச்சக்கர வண்டிகளின் சேவை | |
| 4 | முச்சக்கர வண்டி, டிராக்டர், பேக்ஹோ இயந்திரம், உட்பட அனைத்து மோட்டார் வாகனங்களின் என்ஜின் உட்பட மற்ற அனைத்தும் பழுது பார்த்து சரிசெய்தல் | |
| 5 | வாகனங்களின் மின் அமைப்புகளின் பழுது பார்த்து சரிசெய்தல். | |
| 6 | அனைத்து வாகனங்களையும் டிங்கரிங் செய்யதல், பெயிண்டிங் செய்யதல், குசன் பன்னுதல், முச்சக்கர வண்டியின் ரெஸ்கீன் துனியால் கூறை தயாரித்தல் போன்ற வேலைகளுக்கு | 2000.00 |
| 7 | சகலவிதமான மின் மோட்டார்கள் பழுது பார்த்தல் | |
| 8 | வளி சீராக்கி, குளிர்சாதன பெட்டிகள் பழுது பார்த்தல் | |
| 9 | அலுவலக தளபாடங்கள் (மேசை, கதிரை, கபட்) போன்றவை பழுது பார்த்தல் | 500.00 |
| 10 | மயாணங்களை பராமரித்தல் மற்றும் சுத்தம் செய்தல் போன்ற சேவைகள் | 2000.00 |
| 11 | காணிகள் கணக்கெடுப்பு மற்றும் மதிப்பீடு செய்தல் | 2000.00 |
| 12 | ஜெனரேட்டர்கள், ஒலி பெருக்கிகள் மற்றும் வீடியோ போன்ற உபகரணங்கள் பொருட்கள் வாடகைக்கு விநியோகிக்க | |
| 13 | டிரெய்லர் உடனான டிராக்டர், டிரெய்லர், டிரக், மண் வெட்டும் இயந்திரம், மோட்டார் கிரேடர்கள் உட்பட அது போன்ற வீதி பராமரிப்பிற்கு தேவையான வாகனங்கள் வாடகைக்கு விநியோகித்தல் | 3000.00 |
| 14 | முச்சக்கர வண்டி, கெப் வண்டிகள், கார், வேன் ஆகியவற்றை வாடகைக்கு விநியோகித்தல் | |
| 15 | கட்டுமான ஒப்பந்தக்காரர்கள் பதிவுசெய்வதற்கான கட்டணம் | 5000.00 |

## பொது நிபந்தனைகள்

1 தேவைப்படும் போது ஏலங்களை சமர்ப்பிக்கத் தவறிய மற்றும் டெண்டர் நிபந்தனைகளுக்கு இணங்காத பதிவு செய்யப்பட்ட சப்ளையர்கள் / ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் முன் அறிவிப்பின்றி நீக்கப்படும்

2 இதற்கு முன்னரான வருடங்களில் விண்ணப்பங்களை திருப்தியளிக்கும் வகையில் பூரணப்படுத்தப்படுத்த இயலாமல் போன, பதிவுச் செய்யப்பட்ட வழங்குனர்கள் பட்டியலிலிருந்து பெயர்கள் நீக்கப்பட்ட வழங்குனர்களை, பதிவுச் செய்தல் நிராகரிக்கப்படும்.

3 மாநகர சபைக்கு பொருட்கள் விநியோகிக்கும்போதும் அல்லது சேவை வழங்கும்போதும் கட்டாயம் குறைந்தபட்சம் 60 நாட்கள் சபைக்கு கடன் வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

4 வழங்குனர்களினால் சகல பொருட்களுக்கான கட்டணங்கள் அறவிடாமல் குறுகிய காலத்துக்குள் சபைக்கு விநியோகிக்கப்படவேண்டும்.

5 தேவையான சந்தர்ப்பங்களில், பதிவுச் செய்யப்பட்ட வழங்குனர்களை தவிர, வேறு வழங்குனர்களின் விநியோகம் அல்லது சேவையை பெற்றுக்கொள்வதற்கான அதிகாரம் சபைக்கு உரித்துடையதாகும்.

6 மேலதிக விபரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் தொலைபேசி இலக்கம் 033 - 494 2283 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

எரங்க சேனாநாயக்க
நகரசபை ஆணையாளர்
மாநகர சபை – கம்பஹா

2021.10.15


LK Newspapers Viber Community

கிழக்கு மாகாணத்தில்

# 588 பாடசாலைகளே 21 இல் ஆரம்பம்

- சீருடை அவசியமில்லை
- முழுமையான கற்பித்தல் இல்லை
- தடுப்பூசி போடாத ஆசிரியர்களுக்கு தடை

வி.ரி.சகாதேவராஜா

கிழக்கு மாகாணத்தில் 200 மாணவர்களுக்கு குறைவாக உள்ள ஆரம்ப வகுப்புகளைக் கொண்ட 588 பாடசாலைகள் மாத்திரமே, எதிர்வரும் 21ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளும் திறக்கப்படும் என்ற செய்தியில் உண்மையில்லை எனவும் மாறாக மாகாணத்திலுள்ள வகை 3ஐச் சேர்ந்த 346 பாடசாலைகளும், ஏனைய வகை 2 ,1சி, 1ஏபி வகை பாடசாலைகளில் 200 மாணவர்களுக்குகுறைவாக உள்ள ஆரம்ப பிரிவைக்கொண்ட 242 பாடசாலைகளுமே திறக்கப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.



### இன்று பூர்வாங்க ஏற்பாடுகள்

அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இன்று (18) ஆரம்பமாகின்றன. கொவிட்தடுப்பு தொடர்பாக தயாரிக்கப்பட்ட பதாதைகள், துண்டுப் பிரசுரங்கள், செய்திக் குறிப்புகள் அனைத்தும் மாகாணத்திலுள்ள சகல வலயங்களுக்கும் இன்று கையளிக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் சூழ்நிலை காரணமாக ஒன்றரை வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த பாடசாலைகளை பகுதியளவில் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிப்பதற்கான சகல வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்துள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்திருந்தது.

"இவ்வாரம் பாடசாலைகளை சுத்தப்படுத்தல் உள்ளிட்ட தயார்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆரம்பத்தில் அதாவது முதலிருவாரங்களில் சீருடை அவசியமில்லை. அதேவேளை, முழுமையான கற்பித்தல் நடைபெறமாட்டாது.

"கிழக்கில் இதுவரை 98 சதவீதமாக அதிபர்களும் ஆசிரியர்களும் கல்விசாரா ஊழியர்களும் தடுப்பூசி போட்டுள்ளார்கள். எனினும், தடுப்பூசி போடாத எந்த ஆசிரியரும் வகுப்பறைக்குள் நுழையமுடியாது" என்றார்.

# கடல் பேரணிக்கு குருநகர் மீனவர்கள் எதிர்ப்பு

என்.ராஜ்

இந்திய ரோலர் படகை தடை செய்யுமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் இடம்பெற்ற முல்லைத்தீவில் இருந்து பருத்தித்துறை வரையான கவனயீர்ப்பு போராட்டத்துக்கு குருநகர் பகுதி மீனவர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

நேற்றைய போராட்டத்தை முன்னெடுத்தோர், எந்த இழுவை படகுகளை தடை செய்ய வேண்டும் என குறிப்பிடாமல், போராட்டத்தை மேற்கொள்வது தங்களுக்கு மிகப்பெரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், குருநகர் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த மீனவர்கள், குருநகர், வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில், அதிகளவான ரோலர் படகுகளில் சென்றே, மீனவர்கள் வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் முல்லைத்தீவில் இருந்து பருத்தித்துறை வரையான மீனவர்களை பிரிதிநிதித்துவபடுத்தியே நேற்றைய போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் கூறினர்.

பாராளுமன்ற உறுப்பினரின் தனிப்பட்ட நிகழ்ச்சி



நிரலுக்கமையவே ஒரு சில மீனவ சங்கங்களின் ஆதரவுடன் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாகக் குற்றஞ்சாட்டிய குருநகர் மீனவர்கள், இந்த போராட்டத்துக்கு தங்களுடைய எதிர்ப்பினை வெளியிடுவதாகவும் கூறினர்.

'யாருடைய படகினை தடை செய்ய வேண்டும்? இந்திய மீனவர்களின் படகுகளையா அல்லது யாழ். மாவட்டத்தில் ரோலர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் படகுகளையா என கேள்வி எழுப்புகிறோம்.

'இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியால் மீன்பிடி படகு ஒன்று, நெடுந்தீவு கடற்பகுதியில் வைத்து முற்றாக சேதமாக்கப்பட்டது. இது தொடர்பில் குரல் எழுப்பாத பாராளுமன்ற உறுப்பினர், எங்களுடைய மீன்பிடி முறைமையை மாற்ற வேண்டும், அவற்றை தடை செய்ய கோரி போராட்டத்தை மேற்கொள்கின்றார்' எனவும், குருநகர் மீனவர்கள் சாடினர்.

இந்தப் போராட்டம் ஓர் அரசியல் நிகழ்ச்சிநிரல் எனத் தெரிவித்த அவர்கள், 'எங்களுடைய வாழ்வாதாரம் தற்போது இல்லாமல் போய்விட்டது. இந்திய இழுவை மடிப் படக்கினால் எங்களுடைய கடல் வளம் அழிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பாராளுமன்றத்தில் குரல் கொடுக்காதவர்கள், இன்று எங்களுக்கு எதிராக போராட்டம் மேற்கொள்கின்றனர்' எனவும் குற்றஞ்சாட்டினர்.

இந்தப் போராட்டம் ஓர் அரசியல் நிகழ்ச்சிநிரல் எனத் தெரிவித்த அவர்கள், 'எங்களுடைய வாழ்வாதாரம் தற்போது இல்லாமல் போய்விட்டது. இந்தியன் இழுவை மடிப் படக்கினால் எங்களுடைய கடல் வளம் அழிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பாராளுமன்றத்தில் குரல் கொடுக்காதவர்கள், இன்று எங்களுக்கெதிராக போராட்டம் மேற்கொள்கின்றனர்' எனவும் குற்றஞ்சாட்டினர்.

யானைக் சவட்டத்தால்

# மக்கள் அவதி

வ.சக்தி



மட்டக்களப்பு - பேரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள காட்டு யானைக் கூட்டத்தால், அப்பகுதி மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள்.

இரவு வேளையானதும் அப்பகுதியில் அமைந்துள்ள கிராமங்களுக்குள் உட்புகுந்து அங்குள்ள வாழை, தென்னை, மா, பலா, கரும்பு, மரவெள்ளி, உள்ளிட்ட பயிர்களை துவம்சம் செய்து வருவதாக அங்குள்ள மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

நேற்று முன்தினம் (16) இரவு தும்பங்கேணி, களுமுந்தன்வெளி, இளைஞர் விவசாயத்திட்டம், திக்கோடை, பாலையடிவட்டை, நெல்லிக்காடு உள்ளிட்ட பல கிராமங்களுக்கள் புகுந்த மூன்றுக்கு மேற்பட்ட காட்டு யானைகள், அங்குள்ள பயிர்களை துவம்சம் செய்துவிட்டு நேற்று (17) காலை அப்பகுதியைவிட்டு நகர்ந்துள்ளன.

இந்நிலையில், இரவு முழுவதும் கண்விழித்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், தமக்கு யானை வெடிகளும், இல்லாமல் பெரும் அவஸ்த்தைப்படுவதாகவும், அம்மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

வெடிகள் வழங்குவதில் தாமதம் இருந்ததாகவும், மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப அதனை வழங்கவுள்ளதாகவும், தற்போதைக்கு யானைகளை விரட்டும் 1,000 வெடிகள் வந்துள்ளன எனவும் இப்பிரதேசத்திலிருந்து முற்றாக காட்டு யானைகளை விரட்டுவதற்கு ஆட்பலம் போதாதுள்ளதாகவும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் வெல்லாவெளியில் அமைந்துள்ள சுற்றுவட்டக் காரியாலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



சம்பளத்தை

# 'ரூ.10,000ஆல் அதிகரிக்கவும்'

ஹஸ்பர் ஏ ஹலீம், அ.அச்சுதன், எம்.எஸ்.எம். ஹனீபா

அரச ஊழியர்களின் சம்பளத்தைக் குறைந்த பட்சம் 10 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

தற்போது தாங்க முடியாதளவு விலைவாசிகள் அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (17) அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "விலைவாசி உயர்வினால் பொதுமக்கள் படும் கஷ்டங்களை அவதானிக்கும் போது, அரச ஊழியர்களின் சம்பளம் குறைந்த பட்சம் 10 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்கப்பட வேண்டும். அப்போது தான் வாழ்க்கைச் செலவுச் சுமையை ஓரளவுக்கேனும் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியும்.

"அதேபோல, ஓய்வூதியத்திலும் கனிசமான அதிகரிப்புச் செய்யப்பட வேண்டும். சமுர்த்தி உள்ளிட்ட சகல அரச கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்பட வேண்டும். இதன்மூலம் மக்கள் கடன் இன்றி, உணவு உண்ணும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

"அரசைக் கொண்டு நடத்த நிதி இல்லை என்பதற்காக சகல பொருள்களினதும் விலைவாசியை கண்ணை மூடிக் கொண்டு உயர்த்தி, மக்களைத் துன்பத்துக்கு உள்ளாக்கியுள்ளனர்.

"மக்களுக்காகத் தான் அரசு. எனவே, மக்களின் நலன் பேணும் விடயத்தில் அரசு கவனம் செலுத்த வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.





# புதிய ஆளுநரின் முதல் விஜயம்

எஸ்.றொசேரியன் லெம்பேட், என். ராஜ்

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா,நேற்று முன்தினம் (16) மதியம், மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். இதன்போது, மன்னார் திருக்கேதீஸ்வரம் கோவிலில் பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்ட அவர், திருக்கேதீஸ்வர கோவில் பாலாவி தீர்த்தக் கேணியில், குடத்தில் நீரெடுத்து சிவலிங்கப் பெருமானுக்கு நீர் ஊற்றி வழிபாடு மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வேலிக்கு தீ மூட்டிய இளைஞர்கள் கைது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - நவாலி தெற்கு பகுதியில் உள்ள வீடொன்றின் வேலிக்கு தீ வைத்த குற்றச்சாட்டில், இருவர், மானிப்பாய் பொலிஸாரால, நேற்று முன்தினம் (16) கைது செய்யப்பட்டுள்ளனர்.

நவாலி தெற்கு பகுதியில் உள்ள வீடொன்றின் வேலி, வெள்ளிக்கிழமை (15) இரவு தீ வைத்துக் கொழுத்தப்பட்டிருந்தது.

குறித்த வேலி சில நாள்களுக்கு முன்பே கட்டப்பட்டதாகும்.

இந்நிலையில், வேலிக்கு தீ வைத்தமை தொடர்பாக வீட்டு உரிமையாளரால், மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனடிப்படையில், விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், 19 மற்றும் 21 வயதான இரு இளைஞர்களை கைதுசெய்துள்ளனர்.

அசேதனப் பசளை கோரி

# விவசாயிகள் கவனயீர்ப்பு

ஹஸ்பர் ஏ ஹலீம், தீஷான் அஹமட், எம்.முபாரக்



தங்களுக்கான அசேதனப் பசளையின் தேவையை வலியுறுத்தி, திருகோணமலை, கந்தளாய் பிரதேச விவசாயிகள், கந்தளாய், போட்டங்காடு சந்தியில் இருந்து கந்தளாய் குளம் வரை நேற்று (17) கவனயீர்ப்புப் பேரணியில் ஈடுபட்டனர்.

"எங்களுக்கு அசேதனப் பசளை வேண்டும்" மற்றும் "விவசாயத்துக்கான பசளையை, காலத்துக்கு ஏற்றவாறு வழங்கு" போன்ற கோஷங்களை இதில் கலந்துகொண்ட விவசாயிகள் எழுப்பினர்.

இந்தக் கவனயீர்ப்பில் 42 விவசாய சம்மேளனங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 'வீதி வேலைகளை விரைவுபடுத்தவும்'

நடராஜா கிருஸ்ணகுமார்



முல்லைத்தீவு - திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியில் மேற்கொள்ளப்படுகின்ற வீதி வேலைகளை விரைவுபடுத்துமாறு, புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினரும் முன்னாள் தவிசாளருமான செ.பிறேமகாந் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், தபாலக வீதியின் 500 மீற்றர் தவிர்ந்த மிகுதி பகுதியின் அதியுயர் மின்கம்பிகளின் கீழாக செல்வதனால் குறித்த வீதியின் 500 மீற்றர் நீளமே உள்ளடக்கப்பட்டிருந்தது எனவும் எனினும் இவ்வீதியின் மிகுதிப் பகுதிக்குப் பதிலாக நியூட்டன் வீதியை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும் கூறினார்.

இந்நிலையில், குறித்த திட்டங்கள் எவையும் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படாது உள்ளதனை அவதானிக்க முடிகின்றது எனத் தெரிவித்த அவர், மழை காலம் ஆரம்பித்துள்ள இந்நிலையில் குறித்த வீதிகளின் நிலை மிக மோசமானதாக காணப்படுவதால், பொதுமக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் கூறினார்.ஷ

> இத்திட்டத்துடன் தொடர்புடைய தரப்பினரை எமது சபையின் சார்பில் கோருவதற்கு தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளுமாறு எனது பிரேரணையினை மக்கள் சார்பில் முன்வைத்துள்ளேன்

எனவே, குறித்த திட்டத்தை மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு வெகுவிரைவாக ஆரம்பிக்க ஆவன செய்யுமாறு இத்திட்டத்துடன் தொடர்புடைய தரப்பினரை எமது சபையின் சார்பில் கோருவதற்கு தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளுமாறு எனது பிரேரணையினை மக்கள் சார்பில் முன்வைத்துள்ளேன் எனவும், அவர் தெரிவித்தார்.



கிணற்றில் இருந்து

# 1,529 ரவைகள் மீட்பு

கெ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு - தீர்த்தக்கரை பகுதியில் உள்ள கிணற்றில் இருந்து, 1,529 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் (16) மாலை, தீர்த்தக்கரை பகுதியில் உள்ள கிணறு ஒன்றை துப்புரவு செய்யும் போது, வெடிபொருட்கள் இருப்பதாக மக்கள் தகவல் கொடுத்துள்ளதை தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு விரைந்த விசேட அதிரடிப்படையினர், கிணற்றை சுத்தம் செய்பவர்களை தொடர்ச்சியாக துப்புரவு செய்யுமாறு கூறியுள்ளார்கள்.

கிணற்றை துப்புரவு செய்துகொண்டிருக்கும் போது, துப்பாக்கி ரவைகள் தொடர்ச்சியாக கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.


இதன்போது, கிணற்றில் இருந்து 1,529 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

இவை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இருக்கும் வளத்தை பயன்படுத்தி

# 'மேம்பாட்டை கொண்டு வரவும்'

எம்.எஸ்.எம்.நூர்தீன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி, பொருளாதார மேம்பாட்டை கொண்டு வரவேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவரும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, வாகரைப் பகுதியில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கும் நீரியல் பூங்கா தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல், மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில், நேற்று முன்தினம் (16) நடைபெற்ற போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடந்து கருத்து தெரிவித்த அவர், பொருளாதார மறுமலர்ச்சி அமைச்சால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அமைவாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி, விஷேடமாக கணியம் அதேபோன்று மீன் வளர்ப்பு, இறால் வளர்ப்பு சம்பந்தமான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்.

குறிப்பாக, எங்கள் மாவட்டத்தில் இருக்கும் மீன், நண்டு, இறால் வளர்க்கக்கூடிய இடங்களை சரியாக அடையாளப்படுத்தி, முயற்சியுள்ள மக்களுக்கு பகிர்ந்தளித்து, அதேபோன்று வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் வரவழைத்து முதலீட்டை அதிகரித்து, இதன் ஊடாக வேலை வாய்ப்பை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்" என்றார்.

Newspaper Viber Community

### அரசாங்கத்தின் முடிவால்

# தேயிலை தொழிற்றுறை வீழ்ச்சியடையும்

■ நடராஜா மலர்வேந்தன்

அரசாங்கம் எடுத்த முடிவால் ஏற்பட்டுள்ள இரசாயன உரங்களுக்கான தட்டுப்பாட்டால் தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோரைப் போன்று , தோட்டத் தொழிலாளர்களும் தமது வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத சிக்கலான நிலைமைக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று தேசிய பொறியியல் தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான தொழில்சார் வல்லுநர்கள் சங்கத்தின் பிரதிச் செயலாளர் புலஸ்த்தி வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.



தேயிலை உற்பத்திதுறைக்கு 70 சதவீத சேதனப் பசளை 30 சதவீத அசேதனப் பசளைகளை வழங்காவிட்டால் குறுகிய காலத்திற்குள் தேயிலை உற்பத்தி குறைவடைந்து அந்தத் துறை வீழ்ச்சி காணும் என விவசாய விஞ்ஞான விற்பன்னர்கள் கூறுவதாக புலஸ்த்தி வன்னியாராச்சி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுத் தொடர்பில் அறிக்கையொன்றை விடுத்துள்ள அவர்,

வருடமொன்றுக்கு சுமார் 5,400 கிலோ கிராம் பச்சைத் தேயிலை கொழுந்தை அறுவடை செய்யக் கூடிய ஒரு ஏக்கர் காணிக்கு 140-200 கிலோகிராம் நைட்ரஜன் தேவைப்படும்.

இந்தநிலையில், வர்த்தக ரீதியான தேயிலை உற்பத்திக்கு இரசாயன உரங்களை பயன்படுத்துவதில் தேயிலை உற்பத்தித் துறை நிறுவனங்கள் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளன. உரிய உரங்களை இடாமல் நல்ல விளைச்சலை பெறமுடியாது என தெரிவித்துள்ள அவர், நல்ல விளைச்சல் கிடைக்காவிட்டால் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதாந்த வேலைகளையும், சம்பளத்தையும் வழங்குவது மிகவும் கடினம் என நிர்வாகங்கள் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு விளைச்சல் குறைந்து உற்பத்தி பாதிக்கப்பட்டால் அதன் அழுத்தங்கள் நேரடியாக தோட்டங்களில் வாழும் அப்பாவி தொழிலாளிகள் மீதே சுமத்தப்படும் என்றார்.



## நுவரெலியாவில் கவனயீர்ப்பு



உரத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமாறு கூறி நுவரெலியாவில் நேற்று (17) விவசாயிகளால், கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. விவசாயிகளின் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், நுவரெலியா நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள், 30 நிமிடங்கள் மூடப்பட்டிருந்தன.(டி.சந்ரு)

### கடுமையான கட்டுப்பாடுகளால்

# ஹோட்டல் முன்பதிவுகள் இரத்து

■ ரஞ்சித் ராஜபக்ஷ

வார நாள்களில் வரவுள்ள நீண்ட விடுமுறையுடன், நுவரெலியா நகரிலுள்ள சுற்றுலா விடுதிகள், ஹோட்டல்கள் மற்றும் வீடுகளில் தங்குவதற்காக உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளால் செய்யப்பட்ட முன்பதிவுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என விடுதிகளின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டதால், விடுதிகளில் தங்குவதற்கு செய்யப்பட்ட முன்பதிவுகள், சுற்றுலாப் பயணிகளால் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா பிரதேச சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், அதிகளவான உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் நுவரெலியா நகரத்துக்கு வருகைத் தந்துள்ளதுடன், சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய, அவர்களுக்கான தங்குமிட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# முன்பள்ளி ஆசிரியைக்கும் 10 பேருக்கும் தொற்று

■ ரஞ்சித் ராஜபக்ஷ

கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட முன்பள்ளி ஒன்றின் ஆசிரியை ஒருவர் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் கடமையாற்றும் 10 பேர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மாதம் 21ஆம் திகதி முன்பள்ளிகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், கொட்டகலை பிரதேச்சபைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள், பணியாளர்கள் 57 பேருக்கு கடந்த 15ஆம் திகதி பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதற்கமைய, 10 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் [illegible]

[illegible] (பிரைவேட்) லிமிடட் பி வி 00244043 இல. 169, [illegible]


[illegible] (பிரைவேட்) லிமிடட் பி வி 00245638 இல. 199/1, [illegible]

[illegible] (பிரைவேட்) லிமிடட் பி வி 00234206 இல. 792/3, [illegible]

[illegible] (பிரைவேட்) லிமிடட் பி வி 00245555 இல. 250/11, [illegible]

[illegible] (பிரைவேட்) லிமிடட் பி வி 86761 இல. 18, 3/4, [illegible] கொழும்பு 03.

[illegible]



## விலைமனு கோரல் அழைப்பிதல்

நகர அபிவிருத்தி, கழிவுகளை அகற்றல் மற்றும் சமூகம் தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகாரசபை

### ஹொரணை மில்லேவ பகுதியில் 25 வீடமைப்பு தொகுதிகளை நிர்மாணித்தலுக்கான செயற்திட்டம்

நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA) சார்பாக தலைவர் (மேஜர்), ஹொரணை மில்லேவ பகுதியில் தீர்மானிக்கப்பட்டிருக்கும் தனி வீடமைப்பு தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக சட்டபூர்வமாக தகுதிவாய்ந்த ஏலதாரர்களிடமிருந்து சீல் வைக்கப்பட்ட விலைமனு கோரல் கோரப்படுகின்றது.

**திட்டத்தின் நோக்கம்**

01. ஹொரணை, மில்லேவ பகுதியில் 25 தனிநபர் வீட்டு தொகுதிகளை நிர்மாணித்தல். வீட்டு அலகுகள் 500 சதுர அடி பரப்பளவைக் கொண்டுள்ளன மற்றும் ஒவ்வொரு வீட்டு அலகிலும் 2 படுக்கை அறைகள், வாழும் பகுதி, சமையலறை பகுதி மற்றும் கழிவறை ஆகியவை அடங்கும்.

02. தேசிய போட்டி ஏல நடைமுறைகள் மூலம் ஏலம் நடாத்தப்படும்.

03. ஒப்பந்தத்திற்கு விண்ணப்பிக்கும், ஏலதாரர்கள் கறுப்புப் பட்டியலில் (Black Listed) குறிப்பிடபட்டிருக்கக்கூடாது மற்றும் தகுதியான ஏலதாரர்கள் பின்வரும் தகுதிகளை கொண்டிருக்க வேண்டும்.
   - நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) யில் பதிவுசெய்யப்பட்டு C4 அல்லது அதற்கு மேல் தகுதிபெற்ற தேசிய ஒப்பந்ததாரர்கள் / அபிவிருத்தியாளர்கள்

   அல்லது

   - கடந்த 5 ஆண்டுகளில் செய்யப்பட்ட கட்டுமானப் பணிகளின் வருடாந்திர சராசரி மதிப்பு குறைந்தபட்சம் ரூபா. 50.00 மிள்ளியன்.

04 ஒப்பந்த காலம் - 240 நாட்கள்
செயற்திட்டம் ஆரம்பித்த திகதியிலிருந்து 150 நாட்களுக்குள் 15 வீட்டு தொகுதிகள் நிறைவடைய வேண்டும். மீதமுள்ள வீட்டுத் தொகுதிகள் மற்றும் பிற வெளிப்புற வேலைகள் 240 நாட்களிள் நிறைவடைய வேண்டும்.

05 ஆர்வமுள்ளவர்கள் விலைமனு கோரல் சம்பந்தமான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள பணிப்பாளர் (வீடமைப்பு), நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA), 6 வது மாடி, "செத்சிறிபாய ஸ்டேஜ் I" பத்தரமுல்ல என்ற முகவரியில் அல்லது தொலை பேசி இலக்கம் 011-28759709 (அலுவலக நேரங்களில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை) பெற்றுக்கொள்ளலாம்.

06 ஆங்கில மொழி மூலம் பரிபூர்ணமாக தயாரிக்கப்பட்ட விலைமனு கோரல் விண்ணப்ப பத்திரத்தை பெற்றுக்கொள்ளவதற்கு எழுத்துப்பூர்வ விண்ணப்ப கோரிக்கையை பணிப்பாளர் (வீடமைப்பு), நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA), 6 வது மாடி, "செத்சிறிபாய" பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2021.10.21 ஆம் திகதி முதல் 2021.11.03 ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை முன்வைப்பதன் மூலம் மேலும் ரூபா. 12,500/- (ரூபா பன்னிரன்டாயிரத்து ஐந்நூறு + வெட்) திரும்பி கொடுக்கப்படாத கட்டணத்தை பணிப்பாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபை க்கு செலுத்தவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

07 பூரணமாக நிரப்பப்பட்ட விலைமனு கோரல் விண்ணப்பத்தின் பிரதியுடன் 2021.11.05 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனு கோரல் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனு கோரல் விண்ணப்பம் பெற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்தவுடன் விலைமனு கோரல் விண்ணப்பங்களை திறப்பதற்கான செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் அவ் வேலையில் விலைமனு கோரல் விண்ணப்பதாரிகள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட அதிகார பூர்வமான நபர் இதில் பங்குபெறலாம்.

08 டெண்டர் முடிந்த நாளிலிருந்து 91 நாட்கள் வரை ஏலங்கள் செல்லுபடியாகும்

09 அனைத்து ஏலங்களும் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியிலிருந்து ரூபா. 01.00 மில்லியன் ஏலப் பாதுகாப்பு அல்லது முதலாளியிடமிருந்து எழுதப்பட்ட முதல் கோரிக்கையின் மீது அது திரும்பப்பெற முடியாதது மற்றும் நிபந்தனையின்றி ஈடுசெய்யக்கூடியதாக இருக்கும். ஏலத்தின் செல்லுபடியை விட 28 நாட்கள் வரை ஏல பாதுகாப்பு செல்லுபடியாகும்

10 விலைமனு கோரல் விண்ணப்பம் பூரணப்படுத்துதல் சம்பந்தமான தெளிவுபடுத்தும் கூட்டம் (Pre-Bid Meeting) 2021.10.27 ஆம் திகதி காலை 11.00 மணி நடைபெறும்

தலைவர்,
நகர அபிவிருத்தி அதிகாரசபை,
9 வது மாடி, "செத்சிறிபாயா நிலை I",
பத்தரமுல்ல.

LK Newspapers Viber Community

# தொற்று குறைகிறதென ஒருபோதும் அசட்டையாக இருந்துவிடாதீர்கள்

நீண்டநாட்கள் முடக்கத்துக்குப் பின்னர் நாடு திறக்கப்பட்டமையால், ஒவ்வொரின் முகங்களிலும் ஒருவிதமான புதுத்தெம்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள், அவ்வாறே எதிர்வரும் 21ஆம் திகதி வரையிலும் அமுலில் இருக்கின்றன.

ஆனாலும், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வாகன நெரிசல் ஏற்படும் அளவுக்கு, நீண்டவரிசையில் வாகனங்கள் பயணித்தமையை அவதானிக்கமுடிந்தது. அதேபோல, ஒவ்வொரு நகரங்களிலும் மக்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது. வர்த்தக நிலையங்களில் ஓரளவுக்கு வியாபாரம் களைகட்டியுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம், அரசாங்கத்துக்கெதிரான போராட்டங்களை மழுங்கடிக்கச் செய்வதற்கான ஒரு யுக்தியாகவே முன்னர் விமர்ச்சிக்கப்பட்டது. ஆனால், வடக்கு, கிழக்கு மலையகத்தில் கடந்த இரண்டு நாள்களாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வர்த்தக நிலையங்களாக இருந்தாலும் சரி, போராட்டங்களிலும் சரி, பொதுப் போக்குவரத்து மற்றும் நடமாட்டங்களில் போது சிற்சில இடங்களில் சுகாதார வழிகாட்டல்கள் பின்பற்றப்படவில்லை என்பது கவலையான விடயமாகும். சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடிப்பது தொடர்பில், மென்மேலும் மக்கள் கரிசனையைக் காட்டவேண்டும்.

புள்ளிவிபரங்களை பார்க்குமிடத்து, கொரோனா தொற்றாளர்கள், மரணிப்போரின் எண்ணிக்கையில் சற்று சரிவு தென்படுகிறது. அதனை, இன்னுமின்னும் குறைக்கவேண்டுமாயின், கொரோனா தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாமல் வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருப்போர், தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளவேண்டும். அவற்றுக்கு ஊக்கப்படுத்தவேண்டியது ஒவ்வொருவரினதும் தலையாய கடப்பாடாகும்.

ஒக்டோபர் 21ஆம் திகதி முதல் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்பதனால், மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகள் அன்றையதினத்திலிருந்து முழுமையாக நீக்கப்படலாம். தூர பிரதேசங்களுக்கான பொதுப் போக்குவரத்து சேவைகள் மீளவும் ஆரம்பிக்கப்படும்.

ஆக, பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவோரும், முகக்கவசத்தை அணிதல், கைகளை சுத்தமாக வைத்துக்கொள்ளல், அருகருகே இருந்து பயணிக்கும் பயணிகளுக்கு இடையில் சமூக இடைவெளியை பேணுதல் உள்ளிட்டவற்றை அதியுச்சத்தில் கடைப்பிடிக்கவேண்டும். இல்லையேல், மீண்டுமோர் அலை உருவாகிவிடும்.

பாடசாலை மாணவர்களுக்கும் தடுப்பூசியை ஏற்றும் செயற்றிட்டங்கள் துரிதப்பட்டுத்தப்பட்டுள்ளன என்பதால், ஐயம் களைந்து, தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதற்கு முன்வரவேண்டும். அதேபோல, அதற்காக, தடுப்பூசி வகைகளைத் தேடிக் கொண்டிருப்பது, தங்களுக்கும் தங்களைச் சார்ந்தவர்களுக்கும் தொற்றை தொற்றிவிடுவதற்கு வழிசமைத்துவிடும்.

தீபாவளி பெருநாளுக்காக, ஆடைக் கொள்வனவில் ஈடுபடுவர், அவ்வாறானவர்களும் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும்.

தீபாவளிக்கான தயார்படுத்தல் ஒருபுறம் இருக்க, தீபாவளி வர்த்தகமும் களைகட்டும். அதுவும் கொரோனா வைரஸ் தொற்றை அதிகரித்து, தீபாவளி கொத்தணி உருவாக்கிவிடக்கூடாது என்பதில் அவதானமாக இருக்க வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் அசட்டையாக இருந்துவிடக்கூடாது என்பதே எமது வலியுறுத்தலாகும்.


# தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


## வாழ்வியல் தரிசனம்



'அம்மா' எனும் சொல்லே தெய்வீக மகாமந்திரம். எல்லா உயிர்களின் பிறப்புகளுக்குள்ளும் அம்மாக்கள் இருக்கிறார்கள். சகல உயிர்களும் கடவுளுக்கு ஒன்றேதான்.

யுகங்கள் தோறும் பிறப்புகளும் இறப்புகளும் யதார்த்தமானவை. எனினும் இன்றளவும் உயிர்ப்புடன் துலங்க, இன்மைக்கும் மறுமைக்கும் 'அம்மா' எப்பொழும் புனிதமானவள்தான். அவர்கள், எந்தத் துன்பங்கள் வந்தாலும், நவஉலகைச் சிருஷ்டிக்கிறார்கள். படைக்கும் தெய்வம் 'அம்மா'; பாசத்தின் திருவுருவமும் அம்மாதான். அதனால்த்தான் வையகம் ஒன்றிணைக்கப்படுகின்றது. பிணைப்புகள் இன்றேல் புவனம் பாலைவனமாகும். பூமாலைக்குள் நாராக இருந்து ஒன்றிணைப்பதுபோல், அம்மாவும் இருக்கின்றாள். அக்கறையுடன் கடமைகளைச் செய்பவர்களுக்கு சுமைகள் தெரிவதில்லை. இன்னமும் உலகில் வறுமையின் தாக்கம் குறைந்தபாடில்லை; உயர்ந்த வண்ணமே இருக்கின்றது. எனினும் இத்தனை இன்னல்கள், இயலாமைகளுக்குள் பிள்ளைகளை ஆரோக்கியமாகப் போஷிப்பது சாதாரணமானது கிடையாது. பிள்ளைகளுக்காகப் பசியை மறந்து, உண்ணாமல் இருக்கும் தாய்மார்கள் ஏராளம். தாய்மையின் அர்ப்பணிப்புகளை உணரவேண்டும்; அவர்களின் உடல்நலம் பேணவேண்டும். அம்மா இன்றி, நாங்கள் இல்லை என்பதை உணர்க!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

ஏறும் விலை; சரியும் பொருளாதாரம்; திணறும் மக்கள்

# அமைதி காக்கும் எதிர்க்கட்சி



என்.கே.அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

"தன் மே தவஸ்வல காஸ் அதி நே காம உயன்னத்த காஸ் வலின் ஹொந்தட்ட தியனவனே காஸ் காஸ் நா மேக தமய் மே ஆண்டுவே பரிகம " (இப்ப இந்த நாள்களில காஸ் கிடைக்குது என்ன காஸில் தானே சமையல் நல்லா இருக்குது தானே காஸ் காஸ் இல்லை இதுதான் இந்த அரசாங்கத்தின் இயலாத்தன்மை).

"ஹபய் இதின் றட இல்லுவா, வெனஸ துன்னா, வெனஸ தமய் மே பேன்னே அத காஸ் டிகத் நதிவெலா தியனவா காஸ் டிக சபயன்ன பரி ஆண்டுவக் மே தென பொறொந்துவ சபயய்த நா" (ஆனால், நாட்டைக் கேட்டார்கள்; மாற்றத்தைக் கொடுத்தோம்; மாற்றம் தான் இப்ப நல்லாத் தெரியுது இன்று காஸ் கூட இல்லாமல் இருக்குது காஸ் வழங்க இயலாத அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளையா நிறைவேற்றப்போகுது).

"தன் கொஹெமத சபத ஆண்டுவ றது லூணு கொஹெமத பொம்பய் லூணு லங்கதி காவத அள ஏம கொஹெமத ஜீவன வியதம பொஹொம அடுத" (இப்ப எப்படி சுகமா அரசாங்கம் சின்ன வெங்காயம் எப்பிடி கிட்டடியில பொம்பே வெங்காயம் சாப்பிட்டீங்களா கிழங்கு எல்லாம் எப்பிடி வாழ்க்கைச் செலவு நல்ல குறைவா).

இவையெல்லாம் இன்றைய எதிர்க்கட்சியும் அதன் தலைவர்களும் இன்றைய அரசாங்கத்தைக் கண்டித்துப் பேசிக்கொண்டிருக்கும் வார்த்தைகள் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அது உண்மையில்லை. இந்த வார்த்தைகள் 2015 தோல்விக்குப் பின்னர், மீண்டும் 2019இல் ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றிபெறும் வரையான காலப்பகுதியில், வெவ்வேறு கூட்டங்களில் முன்னாள் ஜனாதிபதியும் இன்னாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ உதிர்த்த வார்த்தைகளாகும்.

அன்று சில நூறு ரூபாய்கள் காஸ் விலை கூடியதற்கே, எதிர்கட்சியில் இருந்த ராஜபக்ஷர்களும் அவர்களது அடிப்பொடிகளும் அன்றைய நல்லாட்சி அரசாங்கத்தை, மேடை மேடையாக வறுத்தெடுத்தது மட்டுமல்லாமல், ஆர்ப்பாட்டங்கள், பரப்புரைகள் என அரசாங்கத்துக்குக் கடுமையான அழுத்தத்தையும் எதிர்ப்பையும் வழங்கினார்கள்.

இன்று சாதாரணமாக வீடுகளில் பாவிக்கும் 12.5 கிலோகிராம் லிட்றோ காஸின் விலை 1,257 ரூபாயால் அதிகரித்து, சிலிண்டர் 2,750 ரூபாயாகவும், லாஃப்ஸ் காஸின் விலை 984 ரூபாயால் அதிகரித்து, சிலிண்டர் 2,840 ரூபாயாகவும் விற்கப்படுகிறது. சும்மா அறிக்கை விட்டதோடு எதிர்க்கட்சி மௌனமாக இருக்கிறது.

இங்கு எரிவாயு மட்டும் விலையேறவில்லை. கட்டுப்பாட்டு விலைகள் நீக்கப்பட்டமையால், அரிசி, பால்மா, கோதுமை மா, சீமெந்து ஆகியவை அதிரடியான வகையில் விலையேறியுள்ளன. இதன் விளைவாக, பாண் உள்ளிட்ட உணவுப்பொருட்களின் விலையும் கணிசமாக அதிகரித்துள்ளன.

கட்டுப்பாட்டு விலை நீக்கம் பற்றி இங்கு இன்னொரு விடயத்தைக் குறிப்பிடுதல் அவசியமாகிறது. கட்டுப்பாட்டு விலையை, அரசாங்கம் நீக்கயது வரவேற்கத்தக்க முடிவு. ஏனெனில் கட்டுப்பாட்டு விலையின் காரணமாக, சந்தையில் பொருட்களின் தட்டுப்பாடு நிலவியது. குறிப்பாக பால்மா, அரிசி, எரிவாயு என்பனவற்றுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவியதும், மக்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ள அல்லோலகல்லோலப்பட்டமையும் நாம் கண்ணால் கண்ட விடயங்கள்.

அரசாங்கம் விதித்த கட்டுப்பாட்டு விலைக்கு விற்க முடியாதெனவும், இறக்குமதிக்கான டொலர் கிடைக்காததால் லாஃப் காஸ் நிறுவனம் எரிவாயு இறக்குமதியையே நிறுத்தியிருந்தது. இதனால் எரிவாயு கிடைக்காமல், பலர் மண்ணெண்ணெய், விறகு அடுப்புகளுக்கு மாற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஆகவே, கட்டுப்பாட்டு விலையை நீக்கியது சரியானதே! ஆனால், இந்த விலைவாசி அதிகரிப்புக்கு அரசாங்கத்தின் முறைகேடான பொருளாதாரத் திட்டமிடலும் பொருளாதாரச் செயற்பாடுகளுமே காரணம். அடிப்படைப் பொருளாதார அறிவு கூட இல்லாதவர்களின் கையில், நாட்டின் பொருளாதாரத்தைக் கையளித்தால் இதுதான் நிலை என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த விலைவாசி ஏற்றம் மாதச்சம்பளத்தில் வாழ்க்கை நடத்தும் பெரும்பான்மை இலங்கையர்களின் அடிமடியில் தீவைத்ததைப் போன்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. விலைவாசி ஏற்றத்துக்கு நிகராகச் சம்பளம் அதிகரிக்காத நிலையில், அத்தியாவசியத் தேவைகளுக்கு என்ன செய்வது என்று தெரியாத நிலையில், இலங்கை குடிமக்கள் திணறிப் போய் இருக்கிறார்கள்.

அன்றாட உழைப்பை நம்பிய மக்களின் நிலை, இன்னும் மோசமானது. கொவிட்-19 முடக்கம், பிரயாணக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றால் அன்றாட உழைப்புக்கான வாய்ப்புகள் சுருங்கிய நிலையில், அவர்களது வாழ்வாதாரம் சாவலுக்கு உள்ளாகியிருக்கிறது.

திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு பற்றி பல செய்தி அறிக்கைகளையும் அண்மைக்காலத்தில் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. சமகால பொருளாதார நிலையின் கீழ், திருட்டுச் சம்பவங்களின் அதிகரிப்பு ஆச்சரியப்படுவதற்கான ஒன்றல்ல. இந்தப் பொருளாதார வீழ்ச்சி தொடருமானால், இத்தகைய சம்பவங்கள் இன்னும் அதிகரிக்கலாம்.

அரசாங்கம் முழுமையாகவும் மோசமாகவும் 'ஃபெயில்' அடைந்துகொண்டிருக்கும் நிலையில், ஆகுமான எதிர்க்கட்சியொன்று என்ன செய்யும்? மிகக் கடுமையாக எதிர்ப்பை வெளிப்படுத்தி, அரசாங்கத்துக்கு கடும் அழுத்தத்தைக் கொடுக்கும்.

இந்நாட்டில் இருக்கும் எதிர்க்கட்சி, என்ன செய்துகொண்டிருக்கிறது? பேருக்கு அறிக்கை விட்டுவிட்டு, அமைதியாக இருக்கிறது. யோசித்துப் பாருங்கள், இத்தகைய சந்தர்ப்பம் ஒன்றில், ராஜபக்ஷர்கள் எதிர்க்கட்சியாக இருந்தால், என்ன செய்திருப்பார்கள் என்று!

நிச்சயமாக இவ்வளவு அமைதியாக இருக்கமாட்டார்கள். எதிர்க்கட்சி என்று ஒன்று இருக்கிறதா, இல்லையா என்று தெரியாத நிலையில்தான் இன்றைய எதிர்க்கட்சியும் அதன் தலைவர்கள் எனப்படுவோரும் செயற்படுகிறார்கள்.

இதற்கும் சிலர் நியாயம் சொல்கிறார்கள். எதிர்க்கட்சியின் இயலாமைக்கு சாட்டுச் சொல்லும் இவர்கள், கோவிட்-19 நிலைவரத்தின் கீழ், எதிர்க்கட்சியால் பெரிதாக என்ன செய்துவிட முடியும். மேலும், கோவிட்-19 ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுவது அவசியம். அதற்கு ஆதர்ஷமாக எதிர்க்கட்சியும் எதிர்க்கட்சித் தலைமைகளும் செயற்படுகிறார்கள் என்று எதிர்க்கட்சியினரின் மௌனத்துக்கு நியாயம் கற்பிக்கிறார்கள். என்னே, எங்கள் எதிர்க்கட்சியனரின் கடமையுணர்வு?

'கொவிட்-19 ஒழுங்குவிதிகளால்த்தான், அவர்கள் கடுமையான எதிர்ப்பைக் காட்டவில்லையாம்; இல்லையென்றால் வெட்டிவீழ்த்தி இருப்பார்களாம்'. இந்த வெட்டி நியாயங்களைத் தன் குழந்தைக்குப் பால்மா வாங்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் பெற்றோர்களிடம், எப்படிச் சொல்வீர்கள்?

உங்கள் விதண்டாவாத நியாயங்களை, எரிவாயு விலையேற்றத்தால் விறகடுப்புக்கு மாறி, விறகடுப்பை ஊதிக்கொண்டிருக்கும் குடிமகனிடம் எப்படிச் சொல்வீர்கள்? உங்கள் சப்பைக்கட்டுச் சாட்டுகளைப் பொருள் விலையேற்றத்தால் மூன்று வேளை உணவை இருவேளையாகச் சுருக்கியுள்ள குடும்பங்களிடம் எப்படி எடுத்துரைப்பீர்கள்?

உண்மையில், இப்படி விலையேற்றங்களைச் செய்ய, அரசாங்கங்கள் பெருமளவுக்குத் தயக்கம் கொள்ளும். ஏனெனில், அவை அரசாங்கங்கள் தமது செல்வாக்கை இழப்பதற்கான பெருங்காரணமாக அமையும்.

எதிர்க்கட்சிகள், தமது ஆதரவை அதிகரித்துக்கொள்ள வழிவகுக்கும். ஆனால், இந்த அரசாங்கம் இதுபற்றியெல்லாம் கவலைப்படுவது போல தென்படவில்லை. அது, அவர்கள் தமது 69 இலட்சம் வாக்காளர்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கை என்பதைவிட, எதற்கும் வக்கற்ற எதிர்க்கட்சியின் இயலாமையின் மீது கொண்ட நம்பிக்கை என்பதுதான் மெத்தப் பொருத்தமான காரணமாக இருக்கும்.

சிறைக்குள் சென்று கைதிகளை மிரட்டிய இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தேயின் பெயரைக் கூடச் சொல்ல நடுநடுங்கும் எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கத்தின் பெரிய புள்ளிகளின் பெயர்களையா சொல்லிக் குற்றம்சாட்டப்போகிறார்.

அந்த இயலாமையின் வடிவமான எதிர்க்கட்சித் தலைவரும், அவரது அடிப்பொடிகளும் உள்ளவரை, தமது ஆட்சிக்கு எந்தப் பங்கமும் வராது என்ற நம்பிக்கையில்தான் இந்த அரசாங்கம், இந்த விலை அதிகரிப்புகளைப் பற்றி அக்கறை கொள்ளாது இருக்கிறதோ என்றுதான் எண்ணத்தோன்றுகிறது.

வழமையாக, வல்லாட்சி அரசாங்கங்கள் எதிர்க்கட்சிகளின் குரலை நசுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதை உலகளவில் அவதானிக்கலாம். ஆனால், இலங்கையில் அதுகூடச் செய்யத் தேவையில்லாத நிலை இருக்கிறது.

ஏனெனில், இலங்கையின் எதிர்க்கட்சி கண்மூடி, வாய்பொத்தி அமைதியாகவே இருக்கிறது. ஒருவேளை, இந்த அரசாங்கம் செல்வாக்கை இழக்கட்டும்; இந்த அரசாங்கம், தனது பெயரைக் கெடுத்துக்கொண்டதும், அதை வைத்து அடுத்த தேர்தலில் வென்று விடலாம்; அதுவரை நமக்கேன் வம்பு என்ற அற்ப நம்பிக்கையில், இவர்கள் அமைதியாக இருக்கிறார்களோ என்னவோ?

ஆக மொத்தத்தில், தேர்தலும் வெற்றியும் அதிகாரமும் மட்டும்தான் இங்கு இவர்களுக்கு முக்கியம். மக்கள் பற்றி எந்த அக்கறையும் இல்லை. பாவம் மக்கள், அவர்களுக்காகக் குரல் கொடுக்கத்தான், இங்கு யாருமில்லை.

## கடிதங்கள்

# வீதியின் விதி

முல்லைத்தீவு, வன்னி விளாங்குளம் முதல் மூன்றுமுறிப்பு வரையான வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் தொடர்ந்தும் காணப்படுவதால், கொம்பு வைத்த குளம், பாலைப்பாணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் - வெள்ளாங்குளம் வீதியின் வன்னிவிளாங்குளம் சந்தியிலிருந்து, பாலைப்பாணி, கொம்பு வைத்தகுளம் ஊடாக மூன்றுமுறிப்பு சந்தி வரை செல்லும் 20 கிலோ மீற்றர் நீளமான வீதி, கடந்த 40 வருடங்களுக்கும் மேலாகப் புனரமைக்கப்படாத நிலையில், குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன் வீதியின் இரு மருங்கிலும் பற்றைக்காடுகள் வளர்ந்துள்ளன.

இவ்வாறான நிலையில், குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதையாகவே இவ்வீதி காணப்படுகின்றது என சுட்டிக்காட்டியுள்ள மக்கள், குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரியுள்ளனர். இது தொடர்பான கோரிக்கையை மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு என்பவற்றுக்கு தொடர்ச்சியாக கடந்த 10 வருடங்களாக முன்வைத்து வருகின்ற போதும், இந்த வீதியைப் புனரமைப்பதற்கான எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

- எம்கிருஷ்ணா

LK Newspapers Viber Community

யூனியன் அஷ்யூரன்ஸ்

# HEALTH 360 திட்டம் அறிமுகம்




யூனியன் அஷ்யூரன்ஸ் சுகாதாரக் காப்புறுதித் திட்டமான HEALTH 360 அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. முழுக் குடும்பத்துக்கும் பரந்தளவு சுகாதார பாதுகாப்பை வழங்கும் வகையில் இந்தத் திட்டம் அமைந்துள்ளது. காப்புறுதிதாரரின் வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் பெற்றோர்கள் அடங்கலாக மூன்று தலைமுறைகளுக்கு அனுகூலங்களை வழங்கும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

யூனியன் அஷ்யூரன்ஸ் HEALTH 360 என்பது வாடிக்கையாளர்களின் அதிகரித்துச் செல்லும் சுகாதாரப் பராமரிப்பு செலவுகளை ஈடு செய்யும் வகையில் அமைந்துள்ளதுடன், குடும்பத்தின் எதிர்பாராத சுகாதார தேவைகளை ஈடு செய்யும் வகையில் அமைந்துள்ளது. HEALTH 360 தீர்வுடன், நுகர்வோருக்கு தமது அன்புக்குரியவர்களுக்காக சகாயமான முறையில் தற்போது சிறந்த சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

HEALTH 360 அறிமுகம் தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "உங்கள் குடும்பம் என்பது உங்களின் மிகவும் பெறுமதியான சொத்தாகும். எந்தப் பெறுமதியும் அல்லது சொத்துகளும் அவர்களின் நலனை ஈடு செய்ய முடியாது. இன்று, நாம் பல சுகாதாரப் பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கின்றோம். அதிகளவில் எதிர்வுகூற முடியாததாக உள்ளதுடன், ஆதரவின்றி எமது குடும்பத்தாரின் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை நிர்வகிப்பது சிக்கலாக அமைந்துள்ளது. இக்கால கட்டத்தில் 83 சதவீதமான இலங்கையர்கள் தொற்றா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 35 சதவீதமானவர்கள் இருதயக் கோளாறுடன் தொடர்புடையவர்களாக அமைந்துள்ளனர். வருடாந்தம் 4.7 மில்லியன் பேர் வரை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இதில் 25000 க்கும் அதிகமான நபர்கள் ஒவ்வொரு வருடமும் புற்றுநோயினால் இனங்காணப்படுகின்றனர். அவ்வாறான செலவுகளின் காரணமாக நபர் ஒருவரின் சேமிப்பில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். HEALTH 360 போன்ற சிறந்த சுகாதார பாதுகாப்பினூடாக, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சிறந்த சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள முடியும். இதனூடாக உங்களுக்கு அவசியமான போது தங்கியிருக்கக்கூடிய பாதுகாப்பு வலையை வழங்கக்கூடியதாக இருக்கும்." என்றார். யூனியன் அஷ்யூரன்ஸ் HEALTH 360 ஊடாக நுகர்வோரின் முழுக் குடும்பத்தினதும் சுகாதார தேவைகளுக்கு ஒற்றை தீர்வு வழங்கப்படும் என்பதுடன், வைத்தியசாலை கட்டணங்கள், சத்திர சிகிச்சை, மருத்துவ செலவுகள், பிரசவ சேவைகள், நோயியல் நிபுணர்கள், பல் மற்றும் பார்வை தொடர்பான சேவைகள் போன்றவற்றுக்கு பரிபூரண தீர்வுகளை வழங்கும். 75 வயது வரை சுகாதார காப்புறுதியை வழங்குகின்றது. வருடமொன்றுக்கு 60 மில்லியன் ரூபாய் வரையான காப்பீட்டையும் வழங்குகின்றது. HEALTH 360 இனூடாக பிரத்தியேகமான, உள்வைக்கப்பட்ட பாரதூரமான நோய் காப்பீடு, வெளிநோயாளர் மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அனுமதி காப்பீடு போன்றவற்றுடன் தடுப்பூசிகள் மற்றும் நோய் இனங்காணல் பரிசோதனைகள் போன்றனவும் வழங்கப்படுகின்றன.




SLT-MOBITEL இனால்

# 'Online Kidz Carnival' முன்னெடுப்பு

சிறுவர்கள் அதிகளவு துடிதாட்டமானவர்களாகவும், தமது இலக்குகளை நோக்கி நாளாந்தம் வளர்ச்சியடைபவர்களாகவும் உள்ளனர். கொவிட்-19- தொற்றுப் பரவல் காரணமாக அனைவருக்கும் சவால்கள் நிறைந்த சூழலில், சிறுவர்களும் தமது வீடுகளில் முடங்கியுள்ளனர். இதனால் அவர்களின் தினசரி விளையாட்டு செயற்பாடுகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த சவால்களை புரிந்து கொண்டு, SLT-MOBITEL இனால் சிறுவர்களுக்கு களிப்பு மற்றும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நிகழ்வுகள் உலக சிறுவர் தினம் 2021 முன்னிட்டு ஒன்லைனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் புகழ்பெற்ற சச்சினி நிபுன்சலா, கிளிஃபர்ட் ரிச்சர்ட் மற்றும் திலன் சேனநாயக்க ஆகியோர் அடங்கியிருந்தனர்.

30,000 க்கும் அதிகமான சிறுவர்கள் இந்த நிகழ்வுகளில் Zoom, YouTube மற்றும் Facebook வாயிலாக இலங்கையின் சகல பாகங்களிலிருந்தும் இணைந்து கொண்டனர். சிறுவர்களுக்கு நேரடியாக ஒன்லைனில் தொடர்புகளை ஏற்படுத்தவும் முடிந்தது. இந்த நிகழ்வில் சிறுவர்களுக்கான பாடல் மற்றும் நடன போட்டிகள் இடம்பெற்றதுடன்,

> 30,000 க்கும் அதிகமான சிறுவர்கள் இந்த நிகழ்வுகளில் Zoom, YouTube மற்றும் Facebook வாயிலாக இலங்கையின் சகல பாகங்களிலிருந்தும் இணைந்து கொண்டனர். சிறுவர்களுக்கு நேரடியாக ஒன்லைனில் தொடர்புகளை ஏற்படுத்தவும் முடிந்தது

கல்விசார் மற்றும் களிப்பூட்டும் கேம்களும் இடம்பெற்றன. இந்த போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு விசேட பரிசுகளை SLT-MOBITEL வழங்கியிருந்தது.

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில் SLT-MOBITEL இனால் அடுத்த தலைமுறையினரை ஊக்குவிப்பதில் அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. தொழில்நுட்ப ரீதியிலான கல்வியைத் தொடர அவசியமான சாதனங்கள் மற்றும் அறிவை வழங்குவதுடன், அவர்களின் கல்வியைத் தொடர உதவி, தேசத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்த சொத்தாக திகழ உதவுகின்றது.

திருவனந்தபுரம்

கேரளாவில் கனமழை;

# நிலச்சரிவில் எண்மர் மரணம்

## மண்ணில் 22 பேர் புதையுண்டர்

கேரளாவில் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 8 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 22 பேர் மண்ணில் புதைந்துவிட்டனர் என தெரிகிறது. மீட்பு பணிகளில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

தென்கிழக்கு அரபுக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால், கேரளாவில் பெரும்பாலான மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. தொடர் மழை காரணமாக பல ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. முக்கிய சாலைகளில் மழை நீர் சூழ்ந்துள்ளதால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.



இந்த சூழலில், இடைவிடாது பெய்த மழையால் கோட்டயம் மாவட்டத்தில் நேற்று (17) பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் அப்பகுதியில் இருந்த 3 வீடுகள் இடிந்து விழுந்தன. தகவலறிந்து அங்கு வந்த பேரிடர் மீட்புப் படையினர், 3 பேரின் உடல்களை மீட்டனர். கோட்டயம் மாவட்டம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு 4 இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. நிலச்சரிவில் 10 பேரை காணவில்லை.

இடுக்கி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 2 பேர் உயிரிழந்தனர். மேலும் காணாமல் போன பலரை தேடும் பணி நடைபெற்று வருகிறது. இடுக்கி மாவட்டம் பூவஞ்சி பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. அங்கும் 10 பேரை காணவில்லை. இவர்கள் மண்ணில் புதைந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

புதுடெல்லி

# மம்தா செயல்பாட்டால் காங்கிரஸ் அதிருப்தி


காங்கிரஸ் கட்சியின் நிர்வாகக் கூட்டம் புதுடெல்லியில் சனிக்கிழமை தொடங்கியது. இதில் பல்வேறு அரசியல் பிரச்சினைகள் அலசப்பட்டன. காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து சென்று மம்தா பானர்ஜி தொடங்கிய திரிணமூல் காங்கிரஸின் வளர்ச்சி குறித்தும் அலசப்பட்டதாகத் தெரிகிறது.

இதில் மேற்கு வங்கத்துக்கு வெளியே பிற மாநிலங்களில் கால் பதிக்கும் திரிணமூல் காங்கிரஸின் நடவடிக்கை, காங்கிரஸ் கிரஸை பாதிப்பதாக புகார் எழுந்துள்ளது. இதன் காரணமாக அக்கட்சி மீது காங்கிரஸ் கடும் அதிருப்தியில் இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.



சமீபத்தில், அசாமின் மூத்த காங்கிரஸ் தலைவரான சுஷ்மிதா தேவ், கோவாவின் முன்னாள் காங்கிரஸ் முதலமைச்சர் லுஜின்ஹோ பலிரோ ஆகியோர் தங்கள் ஆதரவாளர்களுடன் மம்தா கட்சியில் இணைந்தனர். லுஜின்ஹோவின் இழப்பால் அடுத்த ஆண்டு நடைபெறும் கோவா தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்கு சிக்கல் உருவாகி விட்டது. இதனால் தம்மிடமிருந்து வெளியேறியத் தலைவர்களை விட அவர்கள் இணைந்த திரிணமூல் காங்கிரஸின் மம்தா மீது காங்கிரஸ் கடும் கோபம் கொண்டுள்ளது.

இந்நிலையில், பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) வுக்கு எதிரான கட்சிகளில் காங்கிரஸுடன் மம்தாவின் கட்சியும் முக்கியமான தாக கருதப்படுகிறது. மம்தா, எதிர்க்கட்சிகளின் பிரதமர் வேட்பாளராகவும் சில கட்சிகளால் பேசப்படுகிறார். இந்தச் சூழலில் மம்தா மீது காங்கிரஸ் காட்டும் அதிருப்தி எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைக்கு சிக்கலை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.




ஷாடோல்

# சிகரெட் தர மறுத்தவர் படுகொலை

மத்திய பிரதேசத்தில் 'ஓசி' சிகரெட் தர மறுத்த கடைக்காரரர் அடித்து கொலை செய்யப்பட்டது தொடர்பாக, மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய பிரதேசத்தில் ஷாடோல் மாவட்டம் டியோலன்டு நகரில் உள்ள கடையொன்றுக்கு, நான்கு பேர் சென்று இலவசமாக சிகரெட் தரும்படி கேட்டுள்ளனர். அதற்கு கடைமுதலாளி, "கையில காசிருந்தால் வாயில ஊதலாம்," என, கூறியுள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த நான்கு பேரும், கடைமுதலாளியை அடித்து உதைத்துள்ளனர்.

இதையடுத்து நால்வரும் தப்பியோடி விட்டனர். படுகாயமடைந்த கடைமுதலாளி, மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து, பொலிஸார் கொலை வழக்கு பதிவு செய்து, தப்பியோடிய மூவரை கைது செய்துள்ளனர்.

சென்னை

# 'தி.மு.க.வின் சாயம் வெளுத்துவிட்டது'

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு என்பதுபோல திராவிட முன்னேற்ற கழகத்தின் (தி.மு.க) சாயம் வெளுத்துவிட்டது என்றும் வருகின்ற மக்களவைத் தேர்தலில் தி.மு.க.வுக்கு மரண அடி கொடுக்க மக்கள் தயாராகிவிட்டார்கள் எனவும் அண்ணா திராவி முன்னேற்ற கழக ஒருங்கிணைப்பாளர் ஓபிஎஸ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமை ஒருங்கிணைப்பாளர் ஓபிஎஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரால் தோற்றுவிக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மாபெரும் மக்கள் இயக்கம் பொன்விழா கொண்டாடுகிறது.



அ.தி.மு.க., 17.10.2021 அன்று 49 ஆண்டு கால வெற்றிப் பயணத்தை நிறைவு செய்து, 50ஆவது பொன் விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது என்பதையும், இந்தப் பொன் விழா ஆண்டில் அதிமுக ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றும் பெரும் பாக்கியம் எனக்கு இறைவனால் அருளப்பட்டிருக்கிறது என்பதையும் நன்றியுடனும், மகிழ்ச்சியுடனும் நினைவில் கொள்கிறேன்.

அதிமுக தோன்றி 49 ஆண்டுகள் நிறைவு பெற்று, 50ஆவது பொன் விழா ஆண்டு தொடங்கும் இப்பொன்னாளில், ஜெயலலிதாவின் வழிகாட்டுதலோடு, அவர் வகுத்துக் கொடுத்த பாதையில் பயணித்து, மீண்டும் அ.தி.மு.க ஆட்சி மலர ஓயாது உழைப்போம் என நாம் அனைவரும் சூளுரைப்போம்". இவ்வாறு ஓபிஎஸ் தெரிவித்துள்ளார்.

சென்னை

# 50ஆவது ஆண்டில் காலடிவைக்கும் அ.தி.மு.க

மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஆரம்பித்த அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க) 50 ஆவது ஆண்டு தொடங்குகிறது. இதனை அடுத்து அ.தி.மு.க சார்பில் நேற்று (17) பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.



அதன்படி சென்னை ராயப்பேட்டையிலுள்ள அ.தி.மு.க தலைமை அலுவலகத்தில் நேற்று காலை மறைந்த முன்னாள் முதலமைச்சர்கள் எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா சிலைகளுக்கு அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ பன்னீர்செல்வம் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மேலும், இருவரும் அ.தி.மு.க கட்சி கொடியை தலைமை அலுவலகத்தில் ஏற்றி வைத்து நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு இனிப்பு வழங்கினர். அது மட்டுமல்லாமல் மக்கள் தொண்டில் மகத்தான் 50 ஆண்டுகள் என்ற தலைப்பில் அதிமுக பொன்விழா சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் தயாரிக்கப்பட்ட பொன்விழா பாடலை ஓ.பன்னீர் செல்வம், எடப்பாடி பழனிசாமி வெளியிட்டனர்.

இதனைத் தொடர்ந்து தலைமை அலுவலகத்தில் இருந்து சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா, எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் நினைவிடங்களுக்கு சென்று மரியாதை செலுத்தினர்.

LK Newspapers Viber Community

இந்தோனேஷியா

# ஆற்றை தூய்மைப்படுத்திய 11 மாணவர்கள் உயிரிழப்பு

இந்தோனேஷியாவில் ஆற்றை சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த 21 மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜாவா மாகாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இருந்து ஒருநாள் சுற்றுலாவுக்கு ஆற்றை சுத்தப்படுத்தும் பணிக்கு 150 மாணவர்கள் அழைத்து செல்லப்பட்டனர்.

இந்நிலையில் ஒரு மாணவன் திடீரென தண்ணீரில் தவறி விழுந்து விட, அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த அடுத்தடுத்த மாணவர்கள் என மொத்தம் 21 மாணவர்கள் ஆற்றில் விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் அவர்களில் 10 மாணவர்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய மாணவர்கள் பரிதாபகரமாக ஆற்றில் மூழ்கி உயிரிழந்தனர்.



ஐஸ்லாந்து

## முதல் இடத்தில் ஐஸ்லாந்து

2021-ஆம் ஆண்டில் உலகின் மிகப் பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் ஐஸ்லாந்து முதலிடத்தை பிடித்துள்ளது .

ஒவ்வொரு வருடமும் உலகின் பாதுகாப்பு மிக்க நாடுகளின் பட்டியலை மதிப்பெண்களின் அடிப்படையில் Global Peace Index நிறுவனம் வெளியிட்டு வருகிறது. இந்நிலையில் இவ்வாண்டுக்கான பட்டியலானது அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

163 நாடுகள் இடம் பெற்றுள்ள இப்பட்டியலில் முதல் 1ஆவது இடத்தில் ஐஸ்லாந்தும், 2ஆவது இடத்தில் டென்மார்க்கும் 3ஆவது இடத்தில் நியூசிலாந்தும் இடம் பிடித்துள்ளன.

இதனைத்தொடர்ந்து நோர்வே, ஒஸ்திரியா , ஸ்லோவேனியா, ஜப்பான்,கத்தார், பின்லாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் முதல் 10 நாடுகளுக்குள் அடங்குகின்றன.

இப்பட்டியலில் இலங்கை 145ஆவது இடத்தையும் , இந்தியா 144 ஆவது இடத்தையும் ஆப்கானிஸ்தான் 163 ஆவது இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## வீடியோவை வைரலாக்க தகாத செயலில் ஈடுபட்ட இளைஞன்

அமெரிக்காவில் உள்ள Rhode Island என்ற பகுதியில் வசித்து வரும் ஜுமன்னே வே (Jumanne Way )என்ற இளைஞர் தனது வீடியோக்கள் வைரலாக வேண்டும் என்பதற்காக உணவகம் ஒன்றில் செய்த மோசமான செயல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உணவகமொன்றில் பணிபுரிந்து வரும் குறித்த இளைஞர் அவ்வுணவகத்தின் கழிவறை கோப்பை ஒன்றின் மீது காய்கறிகள் மற்றும் இறைச்சி உள்ளிட்டவற்றை பரப்பியும், உணவு பொருள்களை வரிசையாக அடுக்கி அதன் மீது கால் வைத்து மிதித்து விட்டு அதனை மீண்டும் எடுத்த இடத்திலேயே அடுக்கி வைத்தும் , ஜூஸ் போத்தல்களை திறந்து குடித்து விட்டு மீண்டும் குளிர்சாதனப் பெட்டியில் வைப்பது போன்ற மோசமான செயல்களைச் செய்து வீடியோவாக இணையத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும் இச் செயல்களால் தனக்கு தண்டனை கிடைத்தாலும் பரவாயில்லை நான் எடுக்கும் வீடியோ இணையத்தில் அதிகளவில் பகிரப்பட்டு அதனால் கிடைக்கும் பணம் தான் எனக்கு முக்கியம் என்று கூறியுள்ளார்.

பின்னர் அந்த வீடியோக்கள் இணையத்தில் வெளியானதையடுத்து குறித்த உணவகத்தில் இருந்து அந்த இளைஞர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



அமெரிக்கா

## ரக்பி போட்டியில் துப்பாக்கிச் சூடு நடத்திய சிறுவன்

அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தில் நடைபெற்ற ரக்பி போட்டியின் போது சிறுவன் ஒருவன் நிகழ்த்திய துப்பாக்கி சூட்டில் 4 பேர் காயமடைந்துள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

லாட் பீபிள்ஸ் அரங்கில் மேல்நிலைப்பாடசாலைகள் மோதிக்கொண்ட ரக்பி போட்டியின் போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன் போது பார்வையாளர் அரங்கில் இருந்த குறித்த சிறுவன் துப்பாக்கியால் 4 பேரை சுட்டு விட்டு தன் நண்பனுடன் காரில் தப்பி செப்பிச்சென்றுள்ளதாகவும் இதில் பெண் ஒருவர் உட்பட 4 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



இந்நிலையில் துப்பாக்கிச் சத்தம் கேட்டு மைதானத்தில் இருந்த ரக்பி வீரர்கள் தங்களை தற்காத்துகொள்ள புல் தரையில் குப்புறப் படுத்த காணொளிக்காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

அமெரிக்கா

## 24 கரட் தங்கத்தில் தண்ணீர் போத்தல்

உலகில் மிக விலை உயர்ந்த தண்ணீர் போத்தலானது விற்பனைக்கு வந்துள்ளது. 720 மில்லி லீற்றர் கொள்ளளவு கொண்ட இத் தண்ணீர்ப் போத்தலின் விலை 60 000 டொலர்கள் ( இலங்கை மதிப்பில் சுமார் 1 கோடியே 21 லட்சம் ) எனவும் இது 24 கரட் தங்கத்தால் ஆன போத்தலில் அடைத்து விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும் எதிர் துருவங்களில் உள்ள பிரான்ஸ், பிஜி ஆகிய நாடுகளில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீர் இதற்கு பயன்படுத்துவதாகவும் இந் தண்ணீரை குடித்தால் அதிக உத்வேகம் கிடைக்கும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரித்தானியா

## ஆளும் கட்சி எம்.பி கத்தியால் குத்திக் கொலை

பிரித்தானியாவில் தேவாலயத்துக்குள் புகுந்த மர்ம நபர் ஒருவர் அங்கிருந்த பாராளுமன்ற உறுப்பினர் டேவிட் அமேஸ்ஸை(David Amess )கத்தியால் குத்தி கொலை செய்த சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவில் 38 ஆண்டுகளாக ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் எம்.பி.யாக இருந்தவர் டேவிட் அமேஸ். 69 வயதான இவர் நேற்று முன்தினம் (15) தனது சொந்த தொகுதியான எசக்ஸ் நகரில் உள்ள தேவலாயத்துக்கு சென்ற போது அங்கிருந்த மக்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்நிலையில் தேவலாயத்துக்குள் கத்தியுடன் நுழைந்த நபர் ஒருவர் திடீரென அமேசை கத்தியால் சரமாரியாக குத்தியுள்ளார். இதனால் இரத்த வெள்ளத்தில் சரிந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதையடுத்து. அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கத்தியால் குத்திய நபரை மடக்கிப் பிடித்து கைது செய்தனர்.

மேலும் இச்சம்பவம் ஒரு பயங்கரவாத செயல் என்று அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இருபதுக்கு 20 உலகக் கிண்ணம்:

# இன்று இலங்கைக்கு முதலாவது போட்டி

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு -20 உலகக் கிண்ணத் தொடரானது நேற்று ஆரம்பித்திருந்த நிலையில், தமது முதலாவது குழுநிலைப் போட்டியில் நமீபியாவை, ஐக்கிய அரபு அமீரகத்தின் அபு தாபியில் இலங்கை நேரப்படி இன்றிரவு 7.30 மணிக்கு இலங்கை எதிர்கொள்கின்றது.


இலங்கை இடம்பெற்றுள்ள இக்குழுவின் மற்றைய இரண்டு அணிகளாக அயர்லாந்து, நெதர்லாந்து ஆகியன உள்ள நிலையில், பிரதான சுப்பர் 12 சுற்றுக்கு இலங்கை முன்னேறுவதற்கு ஒவ்வொரு போட்டியும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

குழாமில் இறுதியாக சேர்த்துக் கொள்ளப்பட்டாலும் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் ஒருவராக பதும் நிஸங்க களமிறங்குவது ஏறத்தாழ உறுதியாயிருக்கின்ற நிலையில், துடுப்பாட்டவீரரர் வரிசையில் தினேஷ் சந்திமால் மற்றும் தனஞ்சய டி சில்வாக்கிடையே போட்டி நிலவுகின்றது.

குஷல் பெரேரா, பானுக ராஜபக்‌ஷ, தசுன் ஷானக, சாமிக கருணாரத்ன ஆகியோரின் இடங்களும் உறுதியாயிருக்கின்ற நிலையில், தனது புதிய இடத்தில் அவிஷ்க பெர்ணான்டோ சாதித்த நிலையில் அதிலேயே அவர் தொடரவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பந்துவீச்சுப் பக்கம் துஷ்மந்த சமீர, வனிடு ஹஸரங்கவோடு, லஹிரு குமார, மஹேஷ் தீக்‌ஷன ஆகியோர் களமிறங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் அயர்லந்தை நெதர்லாந்து எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.









இந்தியாவின் பயிற்சியாளர் பதவிக்கு

## ட்ராவிட் இணக்கம்?

இந்தியாவின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு விண்ணபிக்க கொள்கையளவில், இந்தியாவின் முன்னாள் அணித்தலைவர் ராகுல் ட்ராவிட் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக இந்திய அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் பதவியை ஏற்றுக் கொள்வதில் ட்ராவிட் ஆர்வம் காட்டவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்தியப் பயிற்றுவிப்பாளரொருவரையே கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரி கள் விரும்புவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்திய இலங்கை இராணுவத்தினர்

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய இராணுவத்தினர், இலங்கை இராணுவத்துடன் இணைந்து பல்வேறான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுள்ளனர்.

இதுதொடர்பில், டுவிட் செய்துள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம், "களத்துக்கு அப்பால் விரிவடைந்து வலுப்பெற்று வளர்ச்சியடைந்துவரும் நட்புறவு மற்றும் தோழமையின் பிணைப்புக்கள் விளையாட்டு அரங்கங்களில் ஒன்றிணைந்து தமது திறன்களை வெளிப்படுத்தும் இந்திய - இலங்கை இராணுவத்தினர்" எனக் குறிப்பிட்டுள்ளது.



இத்தாலிய சீரி ஏ தொடர்:

## இன்டர் மிலனை வென்ற லேஸியோ

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், லேஸியோவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலன் தோற்றது. லேஸியோ சார்பாக, சிரோ இம்மொபைலி, பிலிப் அன்டர்சன், சேர்ஜெய் மிலிங்கோவிச்-சவிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். இன்டர் மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை இவான் பெரிசிச் பெற்றிருந்தார்.





## பிரான்ஸ் செல்லும் லெவன்டோஸ்கி?

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்களவீரரான றொபேர்ட் லெவன்டோஸ்கியை கைச்சாத்திடுவதை பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜேர்மைன் இலக்கு வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பரிஸ் ஸா ஜேர்மைனின் முன்களவீரரான கிலியான் மப்பேயின் ஒப்பந்தமானது நடப்பு பருவகாலத்துடன் முடிவடைகின்ற நிலையிலேயே அவரைப் பிரதியிடுவதற்கு 33 வயதான லெவன்டோஸ்கி குறும் பட்டியலில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட்டுக்குச் செல்வதை லெவன்டோஸ்கி விரும்புவதாகக் கூறப்படுகிறது. மியூனிச்சுக்காக 226 போட்டிகளில் விளையாடியுள்ள லெவன்டோஸ்கி, 210 கோல்களைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## யுனைட்டெட்டை வென்ற லெய்செஸ்டர்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், 2-4 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.

லெய்செஸ்டர் சார்பாக, யூரி டெலிமான்ஸ், சுக்லர் சொயுஞ்சு, ஜேமி வார்டி, பஸ்டன் டகா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். யுனைட்டெட் சார்பாக, மேஸன் கிறீன்வூட், மார்க்கஸ் றஷ்ஃபோர்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 18 ஒக்டோபர் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.